பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2051 மார்கழி 23 வியாழக்கிழமை 07.01.2021 கதிர் 63

**இது ரகசியம் அல்ல!**

தந்தை செல்வாவின் காலத்தில் 'தமிழ்ப் பேசும் மக்களாக' ஒன்றிணைந்திருந்தோம். அப்போது தமிழ்ப் பேசும் மக்கள் மதத்தால் வேறுபட்டிருந்த போதும் தமிழராய் ஒன்றிணைந்திருந்தோம்.

தமிழ்ப் பேசும் மக்களின் பெரும்பான்மையினர் பக்கம்02 »

# ஜெனிவாவை ஐக்கியமாக தமிழ்க் கட்சிகள் அணுகும்

## இணக்க நிலைப்பாட்டு ஆவணத்தைத் தயாரிக்க நேற்றைய கொழும்புக் கூட்டத்தில் மூவர் நியமனம்

கொழும்பு, ஜனவரி 07

வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறும் ஐ.நா மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை பற்றிய விவகாரம் எடுக்கப்படவிருக்கையில் அதனை ஐக்கியப்பட்டு ஒரு நிலைப்பாட்டில் அணுகுவதற்கு முயற்சிப்பது எனத் தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் நேற்று இரவு கொழும்பில் கூடிப் பேசி முடிவு செய்தனர்.

இது தொடர்பாக ஒன்றுபட்ட நிலைப்பாட்டு ஆவணம் ஒன்றைத் தயாரிக்க முயற்சி செய்வது என்றும் முடிவு எடுக்கப்பட்டது.

இதற்கான பொறுப்பை எம்.ஏ.சுமந்திரன் எம்.பி, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி மற்றும் கலாநிதி சர்வேஸ்வரன் ஆகியோரிடம் ஒப்படைப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது. பக்கம் 02 »

### கூட்டமைப்புடன் இன்று ஜெய்சங்கர் சந்திப்பு

இலங்கைக்கு பயணம் மேற்கொண்டுள்ள இந்திய வெளிவிவ கார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனை இன்று சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார். கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவரின் இல்லத்தில் காலை 9.30 மணியளவில் இந்தச் சந்திப்பு நடைபெறவுள்ளது. முக்கியத்துவம் வாய்ந்த இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான மாவை சேனாதிராசா, செல்வம் அடைக்கலநாதன், தர்மலிங்கம் சித்தார்த்தன் மற்றும் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரும் பங்கேற்கவுள்ளனர்.

### வியாழேந்திரனுடனும் ஜெய்சங்கர் சந்திப்பு!

கிழக்கு மக்களின் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக இந்திய வெளிவிவகார பக்கம் 02 »



### கொரோனா காவு 219

இலங்கையில் கொரோனா வைரஸ் தாக்கத்தால் மேலும் இருவர் உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது. பக்கம்02 »

### மேலும் 522 பேருக்கு கொரோனா தொற்று

இலங்கையில் நேற்றும் 522 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதன்படி கொரோ பக்கம் 02 »

### கோட்டாவுடன் ஜெய்சங்கர் மூடிய அறைக்குள் சந்திப்பு



உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு இலங்கை வந்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை, ஜனாதிபதி பக்கம் 02 »

13 ஆவது திருத்தம் உட்பட அர்த்தம் உள்ள வகையில்

## தமிழர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்யுங்கள்!

இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் இன்று கொழும்பில் செய்தியாளர் சந்திப்பில் வலியுறுத்து



கொழும்பு,ஜன 07

"இலங்கை தனது சொந்த நலனுக்கு ஐக்கிய இலங்கைக்குள் தமிழர்களின் எதிர்பார்ப்பான சமத்துவம், நீதி, சமாதானம், கௌரவம் ஆகியவற்றை நிறைவு செய்ய வேண்டும். அதேசமயம், அரசமைப்புக்கான 13ஆவது திருத்தம் உள்ளடங்கலாக அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வுக்காக இலங்கை வழங்கிய உறுதிப்பாடுகளுக்கும் பக்கம் 02 »

### தமிழர் விவகாரத்தில் இந்தியா அக்கறை; சபையில் கூட்டமைப்பு நன்றி தெரிவிப்பு

இலங்கைத் தமிழ் மக்கள் தொடர்பில் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் முன்வைத்துள்ள கருத்துகளுக்குத் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு நாடாளுமன்றத்தில் நன்றி தெரிவித்துள்ளது.

தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு, பக்கம் 11 »

### நிபுணர் குழுவினரின் ஆய்வைத் தொடர்ந்தே இலங்கைக்குத் தடுப்பூசி கொண்டுவரப்படும்

**சுகாதார அமைச்சர் பவித்ரா தெரிவிப்பு**

கொரோனாவைரஸுக்கு எதிரானதடுப்பூசிகள் இலங்கையின் காலநிலைக்கு ஏற்ப நிபுணர் குழுவால் ஆய்வுசெய்யப்பட்டபின்பே நாட்டுக்குக் கொண்டுவர அரசு நடவடிக்கை எடுக்கும் எனச் பக்கம் 11 »

### மாகாணசபைத் தேர்தல்களை வலியுறுத்தினார் ஜெய்சங்கர்!

**அமைச்சர் டக்ளஸ் தகவல்**



இலங்கை – இந்திய மீனவர்கள் தொடர்பிலான பிரச்சினைகளை சுமூகமாக தீர்த்துக் கொள்வதற்கான வழிவகைகள் தொடர்பாக இந்திய வெளியுறவு பக்கம் 11 »

Techno World

Clock Tower Road, Jaffna 0770175346

A/L 2020

பொறியியல் தொழினுட்ப பிரிவு மாணவர்களுக்கு !!!

மீதமுள்ள 10 நாட்களில் அனைத்து செயன்முறைகளும் மீள கற்பிக்கப்படும்.



ஆரம்பம் 08.01.2021 வெள்ளிக்கிழமை

9.30 a.m, 4.30 p.m, 7.30 pm

அனைத்து செயன்முறை வகுப்புகளும் video பதிவுகளாக தரப்படும்.

A/L 2020 பிரிவைச் சேர்ந்த எவரும் பங்குபற்றலாம்.

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
இந்துக்கள். ஆனால் செல்வநாயகம் என்ற கிறிஸ்தவரைத் தமிழினம் நிரந்தரமாகத் தந்தையாக மதித்து, வரித்து ஏற்றுக்கொண்டது.

மதத்தால் வேறுபட்ட முஸ்லிம்களும் கூட 'தமிழ்ப் பேசும் சமூகமாக' ஒன்றிணைந்து நின்றனர். இன்று முஸ்லிம்களின் உன்னதத் தலைவராக மதிக்கப்படும் மர்ஹூம் அஷ்ரப் கூட தந்தை செல்வாவின் – தளபதி அமிரின் – தமிழரசு மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணிப் பாசறையில் புடம் போடப்படவர்தான்.

அது நீண்ட பழைய வரலாறு, *'தமிழ்ப் பேசும் மக்கள்'* ஆக இருந்த நாம், பின்னர் முஸ்லிம்களை இழந்து, *'வடக்கு – கிழக்கு தமிழர்'* ஆனோம். இந்தத் துன்பியல் வரலாற்றின் பின்னால் பல தலைமைத்துவ இழுக்குகள் புதைந்து கிடக்கின்றன. மாறி, மாறி குற்றம் சுமத்தும் பல அபவாதங்கள், குற்றச்சாட்டுகள், புனை கதைகள் உள்ளன. அவை பற்றி இனிப் பேசுவதில் அர்த்தமில்லை. 'கறந்த பால் முலையேறாது' அல்லவா?

இனி அடுத்த கட்டம். மதத்தைக் காட்டித் தமிழரைக் கூறுபோட்டுப் பிரித்து மலினப்படுத்தும் அடுத்த அத்தியாயம் அரங்கேறுகின்றது.

மதங்களுக்கு இடையில் – அவற்றைப் போதித்து வழி நடத்துபவர்களுக்கு இடையில் – முரண்பாடுகள் உண்டு. கசப்புணர்வுகள் உண்டு. நியாயங்கள் உண்டு. தவறான கற்பிதங்கள் உண்டு. ஒரு தரப்பு மற்றையதை ஆக்கிரமிப்பது, கபளீகரம் செய்வது, தன் மத மார்க்கம் ஒன்றே சரியானது எனத் தான் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்று சாதிப்பது வரை பல அத்துமீறல்கள், கோணங்கித்தனங்கள், 'மதம்' பிடித்த மதப் பண்பியல்புகள் தாராளமாக உண்டு. அந்தப் பிரச்சினைகளை மதத் தலைவர்கள் பார்த்துக் கொள்ளட்டும். பார்த்துக் கொள்வார்கள்.

தேவைப்பட்டால், அரசியல் தலைவர்கள் அந்தந்தச் சம்பவ சந்தர்ப்பங்களில் பக்கம் சாராமல் தலையிட்டு சமரசமும் செய்து கொள்ளலாம்.

ஆனால் தமிழர் அரசியலை மதத்தின் பெயரால் நடத்த முற்படக் கூடாது. அதுவும் அரசியல் சர்ச்சைக்குள் மதப் பிளவுகளை தமிழர்களின் மூத்த தலைவர்கள இழுக்கக் கூடாது. அது, அவர்கள் வளர்ந்த பாசறைக்கே அழகல்ல.

எனினும் நிலைமை அப்படியல்ல. அரசியல்வாதிகளின் தோல்வியின் வெப்பியாரம் அப்படிப்பட்ட சின்னதனமான விடயங்களையும் – துரும்பு போன்ற அற்பங்களையும் – பற்றுக் கோடாகப் பிடிக்கப் பண்ணி விடுகின்றன.

தமிழினத்தின் முக்கிய தலைமைப் பதவிகளில் இருந்து கொண்டு மதப்பிளவை முன்னிறுத்தி அரசியல் செய்ய முற்படுவது அரசியல் ஈனத்தனமின்றி வேறில்லை.

அரசியல்வாதிகள் தொடர்பில் எனக்கிருக்கும் காழ்ப்புணர்ச்சியில் இதனை நான் எழுதவில்லை. அரசியல் ரீதியில் ஒன்றுபட்டிருக்கும் தலைவர்களை மதரீதியில் பிளவுகளைக் காட்டி பிரித்து வைக்கும் எத்தனத்திலும் இதனை எழுதவில்லை.

தலைமைத்துவப் பதவியில் இருப்பவர்கள் இன்னொரு தடவை இத்தகைய 'சின்னத்தன' பேச்சுகளை – உரையாடல்களை – உள்கட்சிக் கூட்டங்களில் கூட பேசக்கூடாது. அதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்ற நோக்கில்தான் – இலக்கில்தான் – இது பிரஸ்தாபிக்கப்படுகின்றது.

தந்தை செல்வாவின் பிரதேசத்தில் தமிழ்க்கட்சி ஒன்றின் தொகுதிக் கிளைக் கூட்டம் அதன் தலைவர் தலைமையில் சில தினங்களுக்கு முன் நடந்தது.

அங்குதான் பிதற்றியிருக்கின்றார் அந்தத் தலைவர்.

*"வன்னியில் மிஷனரிமார்தான் நடத்துகின்றனர். அவர்களை வைத்துத்தான் செல்வமும், சாள்ஸ் நிமலநாதனும் அரசியல் செய்கின்றனர். இப்போது யாழ்ப்பாணத்துக்கும் அந்த நிலைமை வந்துவிட்டது எந்த மிஷனரி, யாரின் வெற்றிக்காக, விளம்பரத்துக்கு எவ்வளவு பணம் செலவிட்டது என்பதெல்லாம் எனக்குத் தெரியும். இனியும் இப்படி மிஷனரி ஆதிக்கத்துக்கு இடம் கொடுக்க முடியாது."* – என்ற சாரப்பட விசனம் தெரிவித்துப் பேசியிருக்கின்றார் அந்தத் தலைவர்.

கூட்டத்தில் இருந்த ஓரிரு கிறிஸ்தவர்கள் கொதித்துத்தான் போனார்கள். எனினும், உயரத்தில் இருப்போரை ஒன்றும் செய்ய முடியாது என்று கருதி வாயடைத்திருந்து விட்டு விசனத்துடன் வெளியேறினர்.

அவலை நினைத்துக் கொண்டு உரலை இடிக்கும் வேலை இது என்று நினைக்கிறேன்.

'மழைக்கால இருட்டானாலும் மந்தி கொப்பிழக்கப் பாயாது' என்பார்கள். பாயாது மட்டுமல்ல, பாயவும் கூடாது.

என்ன தோல்வி வரினும் – பின்னடைவு நேரினும் – தனக்குரிய அடிப்படை நிலை மாறாதவனே உண்மைத் தலைவன்.

ஆதரவுப் பலம் போல பின்னால் நிற்கும் சில 'தற்குறிகள்' மத அடிப்படையில், பிளவுபடுத்தும் விதண்டாவாதத்தைப் பேசினால், அந்தக் கயிற்றை விழுங்கி, பகிரங்கக் கூட்டத்தில் ஒப்புவிப்பவர்கள் எல்லாம் தலைவர்கள் அல்லர். தலைமைத்துவக் கதிரைக்கேலாயக்கற்றவர்கள்.

– மின்னல் –

## கொரோனா சாவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
தெஹிவளைப் பகுதியைச் சேர்ந்த 60 வயதுடைய ஆண் ஒருவரும், அளவைப் பகுதியைச் சேர்ந்த 78 வயதுடைய பெண் ஒருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இதன்படி கொரோனாவால் இலங்கையில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 219 ஆக அதிகரித்துள்ளது. இவர்களில் 206 பேர் கொரோனாவின் மூன்றாவது அலையில் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மேலும் 522 பேருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
னாவின் மூன்றாவது அலை மூலம் இதுவரையில் 42 ஆயிரத்து 498 பேருக்கு வைரஸ் தொற்றியுள்ளது.

இதேவேளை, நாட்டில் மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 46 ஆயிரத்து 248 ஆக அதிகரித்துள்ளது.

தொற்றாளர்களில் 39 ஆயிரத்து 23 பேர் குணமடைந்துள்ளனர் எனவும், 7 ஆயிரத்து 06 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## ஜெனிவாவை ஐக்கியமாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
இது தொடர்பான கூட்டம் நேற்று மாலை 6 மணி முதல் இரவு 9.30 மணி வரை இரவு விருந்துடன் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் –

தமிழ்க் கூட்டமைப்பின் சார்பில் மாவை. சோனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன் எம்.பி., மருத்துவர் ப.சத்தியலிங்கம் (மூவரும் இலங்கைத் தமிழரசுக் கட்சி), த.சித்தார்த்தன் எம்.பி (புளொட்), செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. (ரெலோ) ஆகியோரும் –

தமிழ் மக்கள் தேசிய கூட்டணி சார்பில் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் எம்.பி, கலாநிதி க.சர்வேஸ்வரன், த.சிற்பரன் ஆகியோரும் –

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி, செல்வராஜா கஜேந்திரன் எம்.பி., சட்டத்தரணி காண்டீபன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

முன்னதாகக் கிளிநொச்சியிலும் வவுனியாவிலும் நடைபெற்ற கூட்டங்களின் முடிவில், இத்தகைய பொது நிலைப்பாட்டு ஆவணம் ஒன்றைத் தயாரிப்பது தொடர்பில் சுமந்திரனும், கஜேந்திரகுமாரும், கொழும்பில் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரனுடன் கூடி ஆராய வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இந்தக் கூட்டத்தில் பங்குபற்றுவதற்குத் தமது பிரதிநிதியாக கலாநிதி க.சர்வேஸ்வரனை, நீதியரசர் விக்னேஸ்வரன் பிரேரித்தார். அது ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இந்த மூவர் குழு பெரும்பாலும் இன்று கூடி பூர்வாங்க நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் எனத் தெரியவந்தது. (உ)

## தமிழர்களின் எதிர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
இது பொருந்தும்.

– இவ்வாறு கொழும்பில் நேற்று இலங்கை வெளிவிவகார அமைச்சருடன் கூட்டாக நடத்திய செய்தியாளர் சந்திப்பில் வலியுறுத்தியுள்ளார் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர்.

ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் மக்களின் அபிலாசைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்ற செய்தியை அவர் வலியுறுத்தினார்.

இந்தியாவிடமிருந்து கொவிட் தடுப்பூசி பெறும் கோரிக்கையையும் இலங்கை விடுத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர், நேற்று கொழும்பில் தாம் மேற்கொண்ட சந்திப்புகளின் போது இந்த கோரிக்கை அவருக்கு தெரிவிக்கப்பட்டதாகக் அவர் குறிப்பிட்டார்.

இந்தியத் தலைமைக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்ற இந்தக் கோரிக்கையைத் தாம் இந்தியாவுக்கு எடுத்துச் செல்கின்றார் என அவர் கூறினார்.

நாங்கள் இப்போது கொவிட்டுக்குப் பிந்தைய ஒத்துழைப்பைப் பார்க்கிறோம், இந்தியாவில் இருந்து தடுப்பூசிகளை பெறுவதில் இலங்கையின் ஆர்வத்தை நான் என்னுடன் எடுத்துச் செல்கிறேன் என்று அவர் கூறினார்.

வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தனவுடன் கூட்டு ஊடக சந்திப்பில் பேசிய இந்திய வெளிவிவகார அமைச்சர், (இந்தியப் பெருங்கடல்) பிராந்தியத்தில் சர்வதேச ஒத்துழைப்பை இந்தியா தனது கடமையாகக் கருதுகிறது என்று கூறினார்.

கொரோனா வைரஸ் தொற்று இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவைத் துண்டாடவில்லை என்று அவர் குறிப்பிட்டார்.

கடந்த ஆண்டு இரு நாடுகளும் தொடர்ந்தும் உயர் மட்ட தொடர்புகளை பராமரித்து வருவதாக ஜெய்சங்கர் கூறினார்.

"இந்தப் பிராந்தியத்தின் சமாதானத்தையும் நலனையும் நாம் மேம்படுத்தும் நிலையில் இலங்கையின் ஐக்கியம், ஸ்திரம் மற்றும் ஆள்புல ஒருமைப்பாட்டில் இந்திய பலமாக உறுதி பூண்டுள்ளது.

"இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தக் கூடிய அரசியல் கட்டமைப்பை உள்ளடக்கிய செயற்பாடுகளுக்கு எங்கள் ஆதரவு நீண்ட காலமாகத் தொடர்கின்றது.

"ஐக்கிய இலங்கைக்குள் தமிழர்களின் எதிர்பார்ப்பான சமத்துவம், நீதி, சமாதானம், கௌரவம் ஆகியவை நிறைவு செய்யப்படுவது இலங்கையின் சொந்த நலனுக்கு உகந்த விடயமாகும். அதேசமயம், அரசமைப்புக்கான 13ஆவது திருத்தம் உள்ளடங்கலாக அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வுக்காக இலங்கை வழங்கிய உறுதிப்பாடுகளுக்கும் இது, அதேயளவு பொருத்தமானதாகும்.

"இதன் தொடர் விளைவாக இலங்கையின் சுபீட்சமும் முன்னேற்றமும் மேம்படுவதாக அமையும்.

"இரு நாடுகளின் மீனவர் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக கூட்டுக் குழுக்கள் மூலம் பேசுகின்றோம். மீனவர்கள் இயன்ற விரைவில் நாடு திரும்புவதை நாங்கள் எதிர்பார்க்கிறோம். இது குறித்து இன்று மாலை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் நான் பேச விருக்கின்றேன்." – என்றார் ஜெய்சங்கர்.

## வியாழேந்திரனுடனும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
அமைச்சர் கலா நிதி எஸ்.ஜெய்சங்கர் இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரனிடம் உறுதியளித்துள்ளார் என இராஜாங்க அமைச்சரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கொழும்பு வந்துள்ள கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் நேற்று பின் தங்கிய கிராமிய அபிவிருத்தி, மனைசார் கால்நடை வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரனை கொழும்பிலுள்ள தனியார் விடுதியொன்றில் சந்தித்து கலந்துரையாடினார்.

சுமார் இருபது நிமிடங்களிற்கு மேலாக இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர், இந்திய துணை உயர்ஸ்தானிகர் உள்ளிட்ட மேலும் பல அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

## கோட்டாவுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
செயலகத்தில் நேற்று முற்பகல் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

மூடிய அறைக்குள் இந்தச் சந்திப்பு நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

கொரோனா வைரஸ் நோய்க்கு சிகிச்சையளிக்க இந்தியா தயாரிக்கும் தடுப்பூசியை ஏனைய நாடுகளுக்கு வழங்கும் போது இலங்கைக்கு முன்னுரிமை அளிக்கத் தயாராக இருப்பதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் தெரிவித்தார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: –

கொரோனா தொற்று நோயைக் கட்டுப்படுத்துவதற்கான எதிர்கால நடவடிக்கை குறித்து கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, கிச்சையின் அவசியத்தை சரியாக மதிப்பிட்ட பின்னர், இந்தியாவில் தயாரிக்கப்படும் கொரோனாத் தடுப்பூசியைப் பெற இலங்கை விருப்பத்துடன் உள்ளது எனக் கூறினார்.

தடுப்பூசியை பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் போது இலங்கைக்கு முன்னுரிமை அளிப்பதாக ஜெய்சங்கர் உறுதியளித்தார். பரஸ்பர நன்மைகளை அதிகரிக்க இந்திய – இலங்கை இருதரப்பு உறவை பரஸ்பர நன்மையை பெறும் வகையில் மேம்படுத்த ஜனாதிபதியும் இந்திய வெளிவிவகார அமைச்சரும் இணக்கம் தெரிவித்தனர்.

இந்திய பங்களிப்புடன் இலங்கையில் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் திட்டங்களுக்கு மேலதிகமாக, ஒத்துழைப்பு வளர்ச்சியை விரிவுபடுத்தக் கூடிய பல துறைகள் கலந்துரையாடலின் போது அடையாளம் காணப்பட்டன. கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையம், எல்.என்.ஜி (திரவ, இயற்கை எரிவாயு) மின் திட்டம், வீடுகள் மற்றும் வீதிகள் அமைத்தல், விவசாய அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி, தகவல் தொடர்பு தொழில்நுட்பம் மற்றும் மாற்று மின்சக்தி மூலங்களின் அபிவிருத்தி ஆகியவை இதில் அடங்கும்

முறையான கல்வியைப் பெற்ற இளைஞர்கள் இலங்கையில் உள்ளதாக குறிப்பிட்ட ஜனாதிபதி, அந்த இளைஞர்களுக்கு பல்வேறு துறைகளில் முறையான தொழில் பயிற்சி அளிக்க இந்தியாவின் உதவியை எதிர்பார்ப்பதாகத் தெரிவித்தார்.

இலங்கையின் குறிப்பிட்ட தேவைகள் தெரிவிக்கப்படும்போது தொழில் பயிற்சி திட்டங்களுக்கு உதவத் தயாராக இருப்பதாக ஜெய்சங்கர் கூறினார். சூரிய வெப்பத்தை மாற்று மின்சக்தி மூலமாக பயன்படுத்த இந்திய உதவி ஏற்கனவே பெறப்பட்டுள்ளது. இந்தத் துறைக்கு எதிர்காலத்தில் இந்தியா மேலும் நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்க முடியும் என்று அமைச்சர் கூறினார்.

கொரோனாத் தொற்று நோயால் வீழ்ச்சியடைந்துள்ள சுற்றுலாத்துறையை புதுப்பிக்க வேண்டிய அவசியம் குறித்து இரு தரப்பினரும் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர்.

மாலைத்தீவு தொடர்ந்து பபல் முறைமையில் சுற்றுலாப் பயணிகளை அழைத்து வருகின்றது. ஏற்கனவே ஏராளமான இந்தியர்கள் அங்கு சென்றுள்ளனர். தொற்று நோயால் ஏற்படும் மன அழுத்தத்திலிருந்து விடுபட மக்கள் சுற்றுலா பயணம் செய்ய விரும்புகிறார்கள். புதுடில்லியில் உள்ள ஹோட்டல்களில் இப்போது இந்தியர்கள் நிறைந்திருக்கின்றார்கள். இலங்கைக்குச் செல்ல நாங்கள் அவர்களை ஊக்குவிக்க முடியும் என்றும் அமைச்சர் ஜெய் சங்கர் குறிப்பிட்டார்.

சுற்றுலாத்துறையைப் புதுப்பிக்க புதிய நடவடிக்கைகள் குறித்து முடிவு செய்ய இந்தியா, இலங்கை, மாலைத்தீவு மற்றும் நேபாளம் ஆகியவை இணைந்து விரைவில் கலந்துரையாடல் ஒன்றை நடத்த முடிவு செய்யப்பட்டது – என்றுள்ளது.

# தோட்டத்தொழிலாளர்களின் சம்பள விவகாரம்: அரசின் வாக்குறுதி அதன் கொள்கைத்திட்டம்

**ரமேஷ் பத்திரன உத்தரவாதம்**



தோட்டத்தொழிலாளர்களின் நாளாந்த கொடுப்பனவுகளில் அரசாங்கம் கொடுத்த வாக்குறுதிகளை, அரசாங்கத்தின் கொள் கைத்திட்டமாக கொண்டுநடைமுறைப்படுத்த இப்போதும் பல்வேறு மட்டங்களில் அரசாங் கம் உரிய நபர்களுடன் பேச்சுகளை முன் னெடுத்து வருகிறது.

எதிர்வரும் சில தினங்களில் இந்தப் பிரச் சினைக்குச் சாதகமான பதில் ஒன்றைவழங்க முடியும் என்ற உறுதியான நம்பிக்கை அர சாங்கத்துக்கு உள்ளதாக பெருந்தோட்டத்துறை அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த செவ்வாய்க் கிழமை, தொழில் அமைச்சின் கீழ் வரும் கடை, அலுவலக ஊழியர், பெண்களையும் இளம் ஆள்களையும் மற்றும் பிள்ளைகளை யும் தொழிலுக்கமர்த்துதல், குறைந்தபட்ச வேதனங்கள் மற்றும் தொழிற்சாலைகள் (திருத்த) சட்டமூலங்கள் மீதான விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் இதனைக் கூறினார்.

# உயிரியல் ஆயுதத் தாக்குதல்களை தடுக்க அரசாங்கம் பல நடவடிக்கை

## சமல் ராஜபக்ஷ தெரிவிப்பு



உயிரியல் ஆயுதத் தாக்குதல்களைத் தடுக்க அரசாங்கம் பல நடவடிக்கைகளை எடுத்துள்ள தாக நீர்ப்பாசன அமைச்சு மற்றும் அரச பாது காப்பு அமைச்சர் சமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்ற உறுப்பினர் புத்திகா பதிரானா எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்து உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

கொரோனா வைரஸ் ஆரம்பத்தில் ஓர் உயிரி யல் ஆயுதம் என்று விவாதிக்கப்பட்டது. இது போன்ற உயிரியல் ஆயுதத் தாக்குதல்களைத் தடுக்க நாடு முன்னெச்சரிக்கை நடவடிக்கை களை எடுத்துள்ளோம்.

உலகில் ஒருமித்த கருத்தினால் உயிரியல் ஆயுதங்களைப் பயன்படுத்துவது தடைசெய்யப் பட்டிருந்தாலும், அவை இன்னும் பல்வேறு அரசியல் மற்றும் வர்த்தக தந்திரங்களுக்கு இரகசியமாகப் பயன்படுத்தப்படுகின்றன.

இலங்கை உள்ளிட்ட வளர்ச்சியடையாத நாடு கள் இந்த உயிரியல் ஆயுதங்களை சோதனை செய்வதை இலக்காகக் கொள்ள வாய்ப்புள்ளது என்றும் நாடாளுமன்றத்தில் எம்.பி.புத்திகா பதிரானா சுட்டிக்காட்டினார்.

சர்வதேச மாநாடுகளுக்கு ஏற்ப இலங்கை யில் உயிரியல் ஆயுத தாக்குதல்களைத் தடுக்க பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன என்று இதன்போது அமைச்சர் சமல் ராஜபக்ஷ வலி யுறுத்தினார்.

# இலங்கை பத்திரிகைப் பேரவை சட்டத்தைத் திருத்தத் தீர்மானம்

சமகாலத் தேவைகளுக்குப் பொருத்தமானவகையில்இலங்கை பத்திரிகைப் பேரவைச் சட்டத் தைத் திருத்தம் செய்ய தீர்மானிக் கப்பட்டுள்ளது. திருத்தம் தொடர் பான பரிந்துரைகளைப் பெற்றுக் கொள்ள கல்வியிய லாளர் குழு வொன்றைநியமிக்க ஊடகத்துறை அமைச்சர் முன் வைத்த அமைச் சரவை யோசனைக்கு அமைச் சரவைஅங்கீகாரம்வழங்கியுள்ளது.

பத்திரிகை செய்தியாளர்களால் வெளியிடப்படும் செய்திகளால் பொதுமக்களுக்கு ஏற்படும் பாதிப் புக்களைத் தடுப்பதற்காகவும் வெகுசன ஊடகவியலாளர்களுக் கும் மக்களுக்கும் இடையிலான நல்லெண்ண தொடர்புகளைப் பேணுவதற்கும் 1973 ஆம் ஆண்டு 05 ஆம் இலக்க இலங் கைப் பத்திரிகைப் பேரவை சட்டத் தின் மூலம் இலங்கைப் பத்திரி கைப் பேரவை நிறுவப்பட்டது.

சட்ட ஏற்பாடுகள் பத்திரிகைக ளுக்கு மட்டும் வரையறுக்கப்பட் டுள்ளமையால் பத்திரிகைப் பேர வையைக் கட்டமைப்பு ரீதியாக மறுசீரமைத்து இலத்திரனியல், அச்சு மற்றும் நவீன ஊடகங்கள் உள்ளடங்கும் வகையில், ஊடகக் கல்வியை ஊக்குவிக்கும் மைய மாகவும் மீள்கட்டமைக்கப்பட வேண்டுமென இனங்காணப்பட் டுள்ளது.

சமகாலத் தேவைகளுக்குப் பொருத்தமான வகையில் இலங் கைப் பத்திரிகைப் பேரவைச் சட் டத்தை திருத்தம் செய்வதற்காகப் பரிந்துரைகளைப் பெற்றுக்கொள் வதற்கான கல்வியியலாளர் குழு வொன்றை நியமிப்பதற்கும் அதற் காக கருத்துக்கள் மற்றும் யோச னைகளை மக்களிடமிருந்தும் சிவில் சமூக அமைப்புக்களிடமி ருந்தும் பெற்றுக் கொள்வதற்கும் திருத்தம் செய்யப்பட்ட சட்டமூலத் தைத் தயாரிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

# மாவனெல்லை புத்தர் சிலை: சேதப்படுத்தியவர் சிக்கினார்!



மாவனெல்ல – இம்புல்ல பகுதியில் புத்தர் சிலைக்கு சேத மேற்படுத்தியவர் கைது செய் யப்பட்டுள்ளார் என பொலிஸ் ஊடகப்பேச்சாளர்பிரதிபொலிஸ்மா அதிபர் அஜித்றோஹண தெரி வித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு–

மாவனெல்ல – இம்புல்ல பகுதியில் கடந்த மாதம் 28 ஆம் திகதி இரவு வேளையில், கொழும்பு கண்டி பிரதான வீதி யோரத்தில் நிர்மாணிக்கப்பட் டுள்ள, புத்தர் சிலை ஒன்றின் பாதுகாப்பு கண்ணாடியை சேதப்படுத்தியமை தொடர்பில் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பில் மாவனெல்ல பொலிஸார் விசா ரணைகளை ஆரம்பித்திருந் தமையுடன், கேகாலை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் உத் தரவுக்கமைய கேகாலை குற் றப் புலனாய்வு பிரிவினரும் விசாரணைகளை முன்னெ டுத்து வந்தனர்.

அதற்கமைய, கேகாலை – ஹெட்டிமுல்ல பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய பிரி யந்த சம்பத் குமார எனப்படும் நபரே இவ்வாறு கைது செய் யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் போதைப் பொருள் பாவனைக்கு அடிமை யானவர் எனவும் தெரியவந் துள்ளது. சம்பவ தினத்தன்று சந்தேக நபர் சிகிச்சையொன் றின் நிமித்தம் பேராதனைப் பகுதிக்கு சென்றுள்ளமையு டன், அங்கிருந்து தனது வீட் டுக்கு திரும்பி வந்தபோதே, குறித்த புத்தர் சிலையின் பாது காப்பிற்காக பொருத்தப்பட்டி ருந்த கண்ணாடி பகுதியை சேதப்படுத்தியுள்ளார் எனப் பொலிஸாரின் விசாரணைக ளின் போது தெரியவந்துள்ளது.

இதன்போது சந்தேக நபர், புத்தர் சிலையின் அருகில் வைக் கப்பட்டிருந்த 60 ரூபா பணத் தையும் எடுத்துச் சென்றுள்ளார். இவர் இதற்கு முன்னரும் மதஸ் தலம் ஒன்றுக்கு முன்னால் வைக்கப்பட்டிருக்கும் உண்டி யலை உடைத்து அதிலிருந்த பணத்தைத் திருடியுள்ளார் என வும் தெரியவந்துள்ளது.

மேற்படி சம்பவம் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள் ளப்பட்டு வருகின்றன. அதற் கமைய சந்தேக நபர் பயணித்த பஸ் தொடர்பிலும், சி.சி.ரி.வி காணொலிக் காட்சிகள் ஊடா கவும் விசாரணைகள் இடம் பெற்று வருகின்றன.

இந்த விவகாரம் பயங்கர வாத மற்றும் அடிப்படைவாத செயற்பாடுகளுடன் தொடர்பு கொண்டிருக்கலாம் என்று சமூகவலைத் தளங்கள் மற் றும் பல்வேறு தரப்பினர் ஊடா கக் கூறப்பட்டு வந்தது. எனினும் அத்தகைய எந்த செயற்பாடு களும் இதனுடன் தொடர்பு பெற வில்லை என்று விசாரணை களின்போது தெரியவந்துள் ளது.

மேற்படி சம்பவம் தொடர் பான மேலதிக விசாரணைகளை மாவனெல்ல பொலிஸாரும், குற்றப்புலனாய்வு பிரிவினரும் இணைந்து மேற்கொண்டு வருகின்றனர்.

# வெளிநாட்டில் இருந்து இலங்கைத் தொழிலாளர்கள் சொந்த பணத்தில் நாடு திரும்புவது மோசமான நிலை!

நாடாளுமன்ற உறுப்பினர்களின் நிதியம் ஒன்றை ஏற்படுத்தியேனும் வெளிநாட்டுத் தொழி லாளர்களை நாட்டுக்கு அழைத்துவர நடவடிக்கை எடுக்கவேண்டும். அவ்வாறு இல்லாமல் அவர்க ளின் சொந்த பணத்தில் வருமாறு தெரிவிப்பது அவர்களுக்கு செய்யும் பாரிய துரோகமாகும் என எதிர்க்கட்சி உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரி வித்தார்.

அவர் மேலும்தெரிவிக்கையில்–

வருடாந்தம் பல்லாயிரம் கோடி டொலர்களை நாட்டுக்கு கொண்டுவரும் வெளிநாட்டு தொழிலா ளர்கள் ஆயிரக்கணக்கானவர்கள் கொவிட் கார ணமாக நாட்டுக்குவர முடியாது தவித்துக் கொண் டிருக்கின்றனர். அவர்கள் தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டும். தொழில் இல்லா மல், அவர்கள் விடுதிகளில் எந்த வசதியும் இல் லாமல் கஷ்டப்பட்டு வருகின்றனர். சிலர் கையில் பணம் இல்லாமைக்காக விபச்சார தொழிலை மேற்கொள்கின்றனர் என எமக்குத் தகவல் கிடைத் திருக்கின்றது.

ஜனாதிபதி தேர்தலில் வெளிநாட்டு தொழிலாளர் களை அழைத்துவந்து வாக்களிக்கச் செய்தார்கள். அப்போது அவர்களை நாட்டு வீரர்கள் என்றே இந்த அரசாங்கம் பிரசாரம் செய்துவந்தது. ஆனால் இன்று அந்த வீரர்களை அரசாங்கம் மறந்து செயற்படுகின்றது. டுபாயில் இருந்து வருபவர்கள் அவர்களின் சொந்த பணத்தில் பெருந்தொகை செலுத்தியே வருகின்றனர்.

மேலும் கடந்த டிசெம்பர் மாத ஆரம்பத்தில் சவுதி அரேபியாவில் இருந்து 3ஆயிரத்து 500 பேர் நாட்டுக்கு வர எதிர்பார்த்திருந்தனர். ஆனால் அவர்கள் நாட்டுக்கு வருவதாக இருந்தால் – ஹோட்டல்களில் தனிமைப்படுத்திக்கொள்ள முடியுமாக இருந்தால் – சொந்த பணத்தில் வர லாம் என்றே அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டது. அவ்வாறு ஆயிரத்து 800 பேர் வந்திருக்கின்றனர். இது மிகவும் அநியாயமாகும்.

வெளிநாட்டு தொழிலாளர்கள் அவர்களது சொந்தப் பணத்தில் நாட்டுக்கு வந்து, ஹோட்டல் களில் தனிமைப்படுத்தலில் இருப்பது என்றால் அவர்கள் இரண்டு வருடங்கள் உழைக்கும் பணத் துக்கும் அதிக பணத்தை செலவிடவேண்டிவரும். அரசாங்கம் இந்த தொழிலாளர்ளுக்கு இவ்வாறு செய்யக்கூடாது. அதனால் நாடாளுமன்ற உறுப் பினர்களின் நிதியம் ஒன்றை ஏற்படுத்தி, அதன் மூலம் வெளிநாட்டு தொழிலாளர்களை நாட்டுக்கு அழைத்துவர நடவடிக்கை எடுக்கவேண்டும். – என்றார்.

மஞ்சள் கன்றுகள் விற்பனைக்கு!

நல்ல தரமான இரண்டு அடி வரை வளர்ந்த
ஒன்றரை மாத மஞ்சள் கன்றுகள்
யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு உண்டு.
விலை - 150/=







லக்சுமி வெதுப்பகம்
ஆறுகால் மடம்.
077 218 9718

கற்பகவனம் விற்பனை நிலையம்.
461, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ் முற்றம் - Yarl Muttam)
021 492 7778

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தமிழருக்கு ஜெயமான வருகை

இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரின் கொழும்பு வருகையும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் மூடிய அறைக்குள் நடத்திய பேச்சுகளின் பின்னர் இலங்கை வெளிவிவகார அமைச்சருடன் சேர்ந்து கொழும்பில் செய்தியாளர்களுக்கு அளித்த கூட்டுப் பேட்டியில் தெரிவித்த கருத்துகளும் இவ்விடயத்தில் பல தரப்பினருக்கும் – குறிப்பாகத் தமிழர் தரப்புக்கு – இருந்த சந்தேகங்களையும் ஐயுறவுகளையும் பெரும்பாலும் நீக்கியிருக்கும் என்று கருதலாம்.

தமிழர்களுக்கு நீதியை – நியாயத்தை – கௌரவமான வாழ்வை – பெற்றுக் கொடுக்கும் தனது உறுதிப்பாட்டில் இந்தியா தளம்பல் நிலையில் இருக்கின்றதோ என்ற சந்தேகத்தில் இருந்த பலருக்கும் நிலைமையைத் தெளிவாகவும், திட்டவட்டமாகவும், இராஜதந்திர சொல்லாடல்களில் அறுத்துறுத்தும் தெரியப்படுத்தி விட்டார் வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர்.

அவரின் தயாரிக்கப்பட்ட செய்தி உரையில் இரண்டு விடயங்கள் முக்கியமானவை.

★இலங்கையில் இன நல்லிணக்கத்தை ஊக்குவிக்கும் விதத்தில் அரசியல் கட்டமைப்பையும் உள்ளடக்கிய மீள்நல்லிணத்தை ஏற்படுத்தும் முயற்சியில் இந்தியாவின் ஆதரவு நீண்டகாலமாக வெளிப்படையானது. இலங்கையின் ஐக்கியம், ஸ்திரப்பாடு, ஆள்புல ஒருமைப்பாடு ஆகியவற்றுக்காக இந்திய வலுவாக உறுதிபூண்டுள்ளது.

★இலங்கை தன்னுடைய நலனுக்காக, தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகளான சமத்துவம், நீதி, சமாதானம், கௌரவம் ஆகியவற்றை ஐக்கிய இலங்கைக்குள் நிறைவு செய்ய வேண்டும். 13வது திருத்தம் உள்பட அதிகாரப் பரவலாக்கலுக்கு இலங்கை அளித்த உறுதிமொழிகளையும் இது உள்ளடக்கும்.

– இந்த இரண்டு விடயங்களிலும் இரண்டாவதுதான் மிக முக்கியமானது. அதுதான் கோட்டா அரசுக்குத் தனது வெளிவிவகார அமைச்சரைக் கொழும்புக்கு அனுப்பி மோடி அரசு கொடுத்த தெளிவான செய்தியாகக் கொள்ள வேண்டும்.

இராஜதந்திர சொல்லாடல்களில் மென்மையான வார்த்தைகளில் அது கூறப்பட்டிருந்தாலும், முதுகில் தட்டிக் கொடுப்பது போல காட்டிக் கொண்டு, ஒரு சாத்துச் சாத்துவதற்கு ஒப்பானது அது என்றே தோன்றுகின்றது.

தமிழர்களின் நீதி, நியாயமான எதிர்பார்ப்புகளை – அபிலாஷைகளை – வேணவாக்களை – ஐக்கிய இலங்கைக்குள் நிறைவேற்றுவது மட்டுமல்ல, அதையும் தாண்டி அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தின் மூலமும், அது உள்பட பிற வழிகளிலும் அர்த்தமுள்ள அதிகாரப் பரவலாக்கல் என்ற விதத்தில் வழங்கிய உறுதிப்பாடுகளையும் இலங்கை நிறைவு செய்ய வேண்டும் என்பதே அந்தச் செய்தி.

ஆங்கிலத்தில் அமைந்த அந்த சொல்லாடல்களை நோக்கும் போது அதிகாரப் பகிர்வு தொடர்பில் இலங்கை கொடுத்த இரண்டு உறுதிமொழிகளை இந்திய வெளிவிகார அமைச்சர் சுட்டுகின்றார் என்றே தெரிகின்றது.

ஒன்று – அரசமைப்பில் 13ஆவது திருத்தம் மூலமான அதிகாரப் பகிர்வு. அதுதான் 13ஆவது திருத்தத்தில் வந்து விட்டதே, அதை ஏன் திருப்பி நிறைவேற்றப்பட வேண்டிய வாக்குறுதியாக புதுடில்லி குறிப்பிட வேண்டும் என்ற கேள்வி எழுகின்றது. நியாயமான கேள்வி. சரியான பதில் உண்டு.

பதின்மூன்றாவது திருத்தத்தை ஒட்டி இலங்கை நிறைவேற்றுவதற்காகச் சொன்ன பல விடயங்கள் இன்னும் நிறைவு செய்யப்படவில்லை. அவற்றில் சில, அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தில் உள்ளன. ஆனால் நடைமுறைப்படுத்தப்படவில்லை. வேறு சில பேச்சளவில் இருந்தாலும் சட்ட வலுவோ, நடைமுறையாக்கமோ இடம்பெறவில்லை.

அடுத்தது – பதின்மூன்றாவது திருத்தத்துக்கு அப்பால் போய் 'அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வாக' செய்வதாக இலங்கை அவ்வப்போது அளித்த உறுதிமொழிகள். மஹிந்த ராஜபக்ஷ அரசினாலும் ரணிலின் அரசினாலும் கூறப்பட்ட '13 பிளஸ்' யோசனைகள், கூற்றுக்குள் இந்த வகைக்குள் அடங்கும்.

இந்த இரண்டையும் கூட இலங்கை நிறைவு செய்ய வேண்டும் என்று இந்திய வெளியுறவு அமைச்சர் கொழும்பில் நின்றபடி பகிரங்கச் செய்தியாளர் மாநாட்டில் அறிவித்திருக்கின்றார்.

பதின்மூன்றாவது திருத்தத்தை நீக்க வேண்டும், இந்திய அழுத்தத்தில் கொண்டு வரப்பட்ட மாகாண சபை முறைமை அடியோடு ஒழிக்கப்பட வேண்டும் என்றெல்லாம் ராஜபக்ஷ சகோதர்களின் சிங்கள, பௌத்த தீவிரப் போக்கு சகாக்கள் குரல் எழுப்பிக் கூப்பாடு போட்டு வருகையில் –

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தைத் தான் பெற்றுக் கொள்வதற்காக, வர்த்தக அடிப்படையில், மாகாண சபை முறைமை ஒழிக்கப்படுவதைக் கண்டும் காணாமல் பார்த்திருக்க புதுடில்லி இணங்கி விட்டது என்று தென்னிலங்கை ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டு வருகையில் –

இலங்கை தொடர்பில் இந்தியாவின் நிலைப்பாடு இதுதான், நாங்கள் உங்களைக் கைவிட மாட்டோம் என்று இலங்கைத் தமிழர்களுக்கு கனகாத்திரமான செய்தி ஒன்றை பட்டவர்த்தனமாக வெளியிட்டிருக்கின்றார் தமிழரான இந்திய வெளிவிவகார அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கர்.

இந்திய மத்திய அரசின் முக்கியமான பதவியில் இருக்கும் தமிழ் அமைச்சரின் கொழும்பு வருகை இலங்கைத் தமிழர்களுக்கு நம்பிக்கையைத் தருவதாக அமையாமல் போகுமா, என்ன?

# 2021ஆம் ஆண்டில் 726 பில்லியன் ரூபா வெளிநாட்டு கடன் செலுத்த வேண்டும்

## ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி



ரூபாயின் பெறுமதி வீழ்ச்சியடைந்துள்ள நிலையில் 2021 ஆம் ஆண்டில் 726 பில்லியன் ரூபா வெளிநாட்டு கடனை வழங்க வேண்டியுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவார்ட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான எஸ்.எம்.மரிக்கார் எழுப்பிய கேள்விக்கு பதில் வழங்கிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அத்தோடு ரூபாவின் பரிமாற்ற வீதம் சீராக இல்லாதமை காரணமாக கடனின் மதிப்பு அதிகரித்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவார்ட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தற்போதுள்ள கடன்களை திருப்பி செலுத்துவதற்கு அரசாங்கம் அதிக வெளிநாட்டுக் கடனை பெற்றுக்கொள்ளுமா என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கேள்வி எழுப்பியிருந்தார்.

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் விற்பனை விலை 191 ரூபாவாகக் காணப்படுகின்றமையால் மத்திய வங்கியின் தரவு காட்டுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கிழக்கில் புதிதாக 38 பேருக்கு கொரோனா மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்!

கிழக்கு மாகாணத்தில் கடந்த 24 மணித்தியாலத்தில் 38 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக, கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அ.லதாகரன் தெரிவித்துள்ளார்.

இதன்படி, கிழக்கு மகாணத்தில் இதுவரையான காலப்பகுதியில் கொரோனா தொற்று உறுதியானோரின் மொத்த எண்ணிக்கை ஆயிரத்து 323 ஆக உயர்ந்துள்ளது.

அத்துடன், மட்டக்களப்பு மாவட்டத்தில் 264 பேரும், திருகோணமலை மாவட்டத்தில் 173 பேரும், அம்பாறை பிராந்தியத்தில் 34 பேரும், கல்முனை பிராந்தியத்தில் 852 பேரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த நிலையில், தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டவர்களில் 539 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றமையுடன், 802 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இதுவரையான காலப்பகுதியில் கிழக்கு மாகாணத்தில் 7 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளன எனவும் கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அ.லதாகரன் தெரிவித்துள்ளார்.

# இயக்கச்சியில் விபத்து: இருவர் படுகாயம்

பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இயக்கச்சி பகுதியில் செவ்வாய்க்கிழமை காலை 8 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் இருவர் காயமடைந்துள்ளனர்.

முல்லைத்தீவில் இருந்து யாழ்நோக்கி பயணித்த தனியார் பஸ் எதிரே பயணித்த வாகனத்தை முந்திச்செல்ல முற்பட்ட போது சாவகச்சேரியில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்துக்கொண்டிருந்த கென்ரர் வாகனம் மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் வாகனங்களைச் செலுத்திய சாரதிகள் இருவரும் காயமடைந்த நிலையில் பளை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# இங்கு எங்கே உள்ளது தேசிய நல்லிணக்கம்?

## சபையில் சுரேன் ராகவனை வறுத்தெடுத்த மனோ எம்.பி.



கடந்த அரசில் தேசிய நல்லிணக்கத்துக்குப் பொறுப்பான அமைச்சராக நானே இருந்தேன். இன்று உங்கள் அரசு அந்த அமைச்சையே அழித்துவிட்டதே. இந்தநிலையில், இன்று இந்த நாட்டில் எங்கே தேசிய நல்லிணக்கம் இருக்கின்றது?

– இவ்வாறு ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவனிடம் கேள்வி எழுப்பினார் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

கனடாவின் ஒன்டாரியோ நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்படும் ஒரு சட்ட மசோதா, இலங்கையில் தேசிய நல்லிணக்க ஒருமைப்பாட்டை அழிக்கின்றது என ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவன் இந்தச் சபையில் இன்று (செவ்வாய்) சொன்னார்.

ஒன்டாரியோ நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்படும் சட்டம் பற்றி எனக்குத் தெரியாது. ஆனால், இங்கே நான் முதலில் சுரேன் ராகவனிடம் ஒன்றைக் கேட்க விரும்புகின்றேன்.

இந்த நாட்டில் இன்று எங்கே ஐயா தேசிய நல்லிணக்கம் இருக்கின்றது? ஒன்டாரியோ நாடாளுமன்றத்தில் சட்டம் கொண்டு வந்து அழித்து முடிக்க முதலில் இங்கே எங்கே தேசிய நல்லிணக்கம் இருக்கின்றது? சொல்லுங்கள். பார்ப்போம்...!

கடந்த அரசில் தேசிய நல்லிணக்கத்துக்குப் பொறுப்பான அமைச்சராக நானே இருந்தேன். இன்று உங்கள் அரசு அந்த அமைச்சையே அழித்துவிட்டதே. இந்தநிலையில், இன்று இந்த நாட்டில் எங்கே தேசிய நல்லிணக்கம் இருக்கின்றது?

'ஒரே நாடு ஒரே சட்டம்' என உங்கள் அரசு சொல்கின்றது. ஆனால், சிறைத்தண்டனை கைதிகளுக்கு ஜனாதிபதி மன்னிப்பு கிடைக்கின்றது. எனினும், 20, 25 ஆண்டுகள் சிறையில் வாடும் தமிழ்க் கைதிகளுக்கு அது கிடைப்பதில்லை.

இந்த நாட்டில் சிங்களவருடன் சேர்ந்து வாழவே தமிழரும், முஸ்லிம்களும் விரும்புகின்றோம். ஆனால், உங்கள் சட்டம் சிங்களவருக்கு ஒன்று, தமிழருக்கு ஒன்று, முஸ்லிம்களுக்கு என்றல்லவா இருக்கின்றது?

இதுவா தேசிய நல்லிணக்கம், சுரேன் ராகவன்? இந்த நாட்டில் இன்று தேசிய நல்லிணக்கம் இல்லை. தேசிய ஒருமைப்பாடு அமைச்சே இல்லை. மக்களைப் பிழையாக வழிநடத்த வேண்டாம். சும்மா, இந்த அரசில் இல்லாத ஒன்றுக்காக மாரடிக்க வேண்டாம் – என்றார்.

# சுதந்திரக் கட்சியின் செயற்பாடு சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது!

## செஹான் சேமசிங்க குற்றச்சாட்டு

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் செயற்பாடுகள் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளன. கூட்டணியாக செயற்பட்டாலும் அவதானத்துடன் இருப்போம். மீண்டும் ஒக்ரோபர் அரசியல் நெருக்கடி ஏற்படுவதற்கு ஒருபோதும் வாய்ப்பில்லை. பொதுஜன பெரமுன எந்த தேர்தலில் தனித்து போட்டியிட்டாலும் வெற்றி பெறும் என இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.



அநுராதபுரத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் அங்கு மேலும் கூறுகையில் –

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தில் சுதந்திர கட்சி பங்காளி கட்சியாக உள்ளது. ஜனாதிபதி தேர்தலில் பொதுஜன பெரமுன அனைத்து கட்சிகளையும் உள்ளடக்கி ஸ்ரீலங்கா சுதந்திர பொதுஜன பெரமுன என்ற கூட்டணியை உருவாக்கியது. கூட்டணியையும், அரசாங்கத்தையும் பலவீனப்படுத்தும் வகையில் சுதந்திர கட்சியின் உறுப்பினர்கள் செயற்படுகிறார்கள்.

நாடாளுமன்ற உறுப்பினரும் சுதந்திர கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன இந்திய ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் குறிப்பிட்டுள்ள விடயங்கள் சுதந்திரக் கட்சியின் மீது மீண்டும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. அரசாங்கத்துக்குள் இருந்து கொண்டு அரசாங்கத்தை பலவீனப்படுத்தும் செயற்பாடுகள் கடந்த காலங்களில் இவர்களால் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

2014 ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தை நம்பிக்கையானவர்களே பலவீனப்படுத்தினார்கள். 2015 ஆம் ஆண்டு அரசியல் சூழ்ச்சியால் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. கடந்த அரசாங்கத்தின் பலவீனத்தன்மையால் நாட்டு மக்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினார்கள்.

2018 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் நல்லாட்சி அரசாங்கத்தில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடி தற்போதைய அரசாங்கத்தில் ஒருபோதும் ஏற்படாது. சுதந்திரக் கட்சியின் செயற்பாடுகளைத் தொடர்ந்தும் அவதானித்து வருகிறோம். கூட்டணியாகத் தொடர்ந்து இணக்கமாகச் செயற்படுவதே எமது இலக்காகும்.

சுதந்திர கட்சி மாகாணசபை தேர்தலில் தனித்து போட்டியிட்டால் பொதுஜன பெரமுனவிற்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது. எவருக்கு ஆட்சியதிகாரத்தை வழங்க வேண்டும் என்பதை நாட்டு மக்கள் 2018 ஆம் ஆண்டு இடம்பெற்ற உள்ளூராட்சிமன்றத் தேர்தல் ஊடாக தீர்மானித்து விட்டார்கள். ஆகவே பொதுஜன பெரமுன எந்த தேர்தலில் தனித்து போட்டியிட்டாலும் வெற்றிபெறும். – என்றார்.

# ஓட்டமாவடியில் உள்ள பள்ளிவாசல்கள் பூட்டு!

ஓட்டமாவடி பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள கொரோனா பரவலைக் கட்டுப்படுத்த அந்தப் பிரதேசத்திலுள்ள அனைத்துப் பள்ளிவாசல்களையும் செவ்வாய்க்கிழமை முதல் தற்காலிகமாக மூடி வைக்குமாறு சுகாதார வைத்திய அதிகாரி எம்.எச்.எம்.தாரிக் தெரிவித்துள்ளார்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் கடந்த செவ்வாய்க்கிழமை மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனைகளின் போது கொரோனா தொற்றாளர்கள் இனங்காணப்பட்டமையைத் தொடர்ந்து இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கொரோனா தொற்றிலிருந்து பொதுமக்களைப் பாதுகாக்க வேண்டி முஸ்லிம் விவகார பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் எமது பிராந்திய உத்தியோகத்தர்களின் தீர்மானத்துக்கு அமைய பள்ளிவாசல்களை மறு அறிவித்தல் வரை மூடி வைக்குமாறு பள்ளிவாசல்கள் நிர்வாகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக சுகாதார வைத்திய அதிகாரி எம்.எச்.எம். தாரிக் தெரிவித்துள்ளார்.

# சிறுவர் தொழிலை நிறுத்த சட்டம் மட்டும் போதாது!

## விஜித ஹேரத் தெரிவிப்பு



சட்டம் அமைத்து சிறுவர்கள் தொழிலில் ஈடுபடுவதை நிறுத்த முடியாது. மாறாக குடும்பங்களின் வறுமையை இல்லாமலாக்க பொருளாதார வேலைத் திட்டம் அமைக்கப்பட வேண்டும். அத்துடன் உக்ரைனில் இருந்து சுற்றுலா பயணிகளை கொண்டுவந்து அரசாங்கம் நாட்டை அழித்துவிடக்கூடாது என தேசிய மக்கள் சக்தி உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை தொழில் அமைச்சின் கீழ் கடை, அலுவலக ஊழியர், பெண்களையும் இளம் ஆள்களையும் மற்றும் பிள்ளைகளையும் தொழிலுக்கமர்த்துதல், குறைந்தபட்ச வேதனங்கள் மற்றும் தொழிற்சாலைகள் (திருத்தச்) சட்டமூலங்கள் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

கொவிட் தீவிரம் காரணமாக உக்ரேன் நாட்டை முற்றாக மூடிவிடவேண்டும் என அந்த நாட்டு பிரதமர் அறிவித்திருக்கும் நிலையில் உதயங்கவின் தேவைக்காக அந்த நாட்டில் இருந்து சுற்றுலா பயணிகள் அழைத்துவரப்பட்டிருக்கின்றனர்.

எமது நாட்டுக்கு கொவிட் இரண்டாம் அலை வந்தது உக்ரைன் பிரஜையால் என சுதர்னி பெர்ணாந்து புள்ளே நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார். அப்படியாயின் அரசாங்கம் உக்ரைன் சுற்றுலா பயணிகளை கொண்டுவந்து நாட்டை அழித்துவிடவா முயற்சிக்கின்றது என கேட்கின்றேன். – என்றார்.

# கொழும்பு துறைமுக நகர ஆணைக்குழு சட்டமூலம் தயாரிக்க ஜனாதிபதி திட்டம்!

கொழும்பு துறைமுக நகரத்தை இந்திய உபகண்டத்திற்கும், தென்கிழக்காசியாவுக்கும் சேவைகளை வழங்கும் பரந்துப்பட்ட வலையமைப்பை கொண்ட சிறந்த வலய மையமாக அமைக்க கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய அரசாங்கம் எதிர்பார்க்கும் கட்டமைப்புக்குப் பொருத்தமான வகையில் கொழும்பு துறைமுக நகர ஆணைக்குழு சட்டமூலத்தைத் தயாரிப்பதற்காக சட்ட நிபுணர்களுக்கு ஆலோசனை வழங்க ஜனாதிபதி முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

சுபீட்சமான எதிர்காலம் அரசாங்கத்தின் கொள்கை திட்டத்துக்கு அமைய கொழும்பு துறைமுக நகரம் இந்திய உபகண்டத்துக்கும் தென்கிழக்காசியாவுக்கும் சேவைகளை வழங்குவதற்கு பரந்துபட்ட விடயதானங்களுடன் கூடிய விசேட பொருளாதார வலயம் மற்றும் சேவைகள் பொருளாதாரத்தை இலக்காகக் கொண்ட சிறந்த வலய மையமாக மாற்ற கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதற்கு சிறந்த கட்டமைப்புடன் கூடிய போட்டித்தன்மையான சட்ட வரையறை கொண்ட வரி மற்றும் தரக்கட்டுப்பாடுகள் மற்றும் பிணக்குகளுக்குத் தீர்வு காணும் பொறிமுறை மூலம் முதலீட்டாளர்கள், தொழில் முயற்சியாளர்கள், பங்குதாரர்கள், கம்பனிகள், நிதி நிறுவனங்கள் போன்றவற்றை கவர்ந்து டுபாய், சிங்கப்பூர் மற்றும் ஹொங்ஹொங் ஆகிய நாடுகளின் முதலீட்டு கேந்திர நிலையங்கள் போட்டித்தன்மையுடன் செயற்படக் கூடிய வகையில் வசதியளிக்கும் ஆர்வம் மிகுந்த சூழலைத் தோற்றுவிக்க வேண்டியுள்ளது.

இதற்கு தேசிய தேவைகள் மற்றும் சர்வதேச முதலீட்டாளர்களை ஈர்க்கும் வகையில் அரசாங்கம் எதிர்பார்க்கும் கட்டமைப்புக்குப் பொருத்தமான வகையில் கொழும்பு துறைமுக நகர ஆணைக்குழு சட்டமூலத்தைத் தயாரிப்பதற்காக சட்ட நிபுணர்களுக்கு ஆலோசனை வழங்க ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# துமிந்த சில்வாவுக்குப் பொது மன்னிப்பு வழங்குவது தொடர்பில் கவனமெடுக்குக!

## எஸ்.பி.திஸாநாயக்க வலியுறுத்தல்

மரண தண்டனை கைதியான துமிந்த சில்வாவை விடுதலை செய்யுமாறு பல்வேறு தரப்பினர் முன்வைத்துள்ள கோரிக்கை தொடர்பில் ஜனாதிபதி உரிய கவனம் செலுத்த வேண்டும்.

சிறைக்கைதிகளுக்குப் பொது மன்னிப்பு வழங்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு. ஆகவே, துமிந்த சில்வாவிற்கு பொது மன்னிப்பு வழங்குவது சிறந்தது என நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கொவிட் – 19 வைரஸ் தாக்கத்தைக் கட்டுப்படுத்த அரசாங்கம் சிறந்த நடவடிக்கைகளை ஆரம்பத்தில் இருந்து முன்னெடுத்து வருகிறது. பூகோள மட்டத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள கொவிட் பாதிப்பில் இருந்து விடுபடுவது



சுலபமான காரியமல்ல. எம்மைக் காட்டிலும் பலம் மிக்க நாடுகள் கொவிட் – 19 வைரஸ் தாக்கத்தால் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளன.

கொவிட் – 19 வைரஸ் தாக்கத்தால் உயிரிழப்பவர்களின் உடல்களை தகனம் செய்வதா அல்லது அடக்கம் செய்வதா என்று தற்போது தீர்மானம் எடுக்க வேண்டிய தேவை அரசாங்கத்துக்குக் கிடையாது. ஏனெனில் கொவிட் – 19 வைரஸ் தாக்கத்தால் உயிரிழப்பவர்களின் உடல் தகனம் செய்யப்படும் என விசேட வர்த்தமானி வெளியிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதனை நாட்டு மக்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

கொவிட் –19 வைரஸ் தாக்கத்தால் உயிரிழக்கும் முஸ்லிம் சமூகத்தினரது உடல் தகனம் செய்யும் போது அவர்களின் மத உரிமை மீறப்படுகிறது என குறிப்பிடப்படுகிறது. கொவிட் – 19 வைரஸ் தாக்கத்தில் முஸ்லிம் சமூகத்தினர் மாத்திரம் இறக்கவில்லை.

ஏனைய மதத்தினரும் இறந்துள்ளார்கள். கொவிட் தாக்கத்தால் உயிரிழந்தவர்களின் உடல் தகனம் செய்யப்படும் போது இந்து, பௌத்தம் மற்றும் கத்தோலிக்கம் ஆகிய மதத்தினரது இறுதிக் கிரியைகள் முன்னெடுக்கப்படுவதில்லை. இதனால் பிற மதத்தவர்கள் அரசாங்கத்தின் தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை.

கொவிட் – 19 வைரஸ் தாக்கத்துக்கு மத்தியில் மத உரிமைகளுக்கு முக்கியத்துவம் வழங்க முடியாது.

சுகாதாரத் தரப்பினரது தீர்மானங்களுக்கு முக்கியத்துவம் வழங்க வேண்டும் என மதத் தலைவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். இவ்வாறான நிலையில் அரசாங்கம் சுகாதார தரப்பினரது தீர்மானத்துக்கே முன்னுரிமை வழங்கும்.

பாரத லக்ஷ்மன் கொலை வழக்கில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. துமிந்த சில்வாவிற்கு முதலில் துப்பாக்கி சூடுபட்டு அவர் கீழே விழுந்துள்ளார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில் இவருக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்க வேண்டும் எனப் பல்வேறு தரப்பினர் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

சிறைக்கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு. துமிந்த சில்வாவின் விடுதலை தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைக்கு ஜனாதிபதி உரிய கவனம் செலுத்த வேண்டும். துமிந்த சில்வாவின் விடுதலை வரவேற்கத்தக்கது.– என்றார்.

# இனி வாரத்தில் நான்கு நாள்களும் தொடர்ந்து ஒளிப்பரமாகும் கல்விச்சேவை

## குருகுலம் தமிழ் மொழி ஒளிபரப்பு அட்டவணை

### செவ்வாய்க்கிழமை

| | |
|---|---|
| 04.00 - 04.55 | தரம் - 12 உயிர்முறைமைகள் தொழிநுட்பம் (த) |
| 05.00 - 05.55 | தரம் - 13 உயிர்முறைமைகள் தொழிநுட்பம் (த) |
| 06.00 - 06.55 | தரம் - 12 தொழிநுட்பத்திற்கான விஞ்ஞானம் (த) |
| 08.00 - 08.55 | தரம் - 08 கணிதம் (த)(1ஆம், 2ஆம்)<br>தரம் - 08 விஞ்ஞானம் (த)(2ஆம், 4ஆம்) |
| 09.00 - 09.55 | தரம் - 09 கணிதம் (த)(1ஆம், 2ஆம்)<br>தரம் - 09 விஞ்ஞானம் (த)(1ஆம், 2ஆம்) |
| 10.00 - 10.55 | தரம் - 10 கணிதம் (த) |
| 11.00 - 11.55 | தரம் - 11 புவியியல் (த) |
| 12.00 - 12.55 | தரம் - 12 புவியியல் (த) |
| 13.00 - 13.55 | தரம் - 13 புவியியல் (த) |
| 14.00 - 14.55 | தரம் - 07 கணிதம் (த) (1ஆம், 2ஆம்)<br>தரம் - 07 விஞ்ஞானம் (த) (2ஆம், 4ஆம்) |
| 15.00 - 15.55 | தரம் - 12 பௌதிகவியல் (த) |
| 16.00 - 16.55 | தரம் - 13 பௌதிகவியல் (த) |
| 17.00 - 17.55 | தரம் - 13 தொழிநுட்பத்திற்கான விஞ்ஞானம் (த) |
| 18.00 - 18.55 | தரம் - 06 கணிதம் (த) (1ஆம், 2ஆம்)<br>தரம் - 06 விஞ்ஞானம் (த) (2ஆம், 4ஆம்) |
| 22.30 - 23.25 | தரம் - 12 அரசியல் விஞ்ஞானம் (த) |
| 23.30 - 24.30 | தரம் - 13 அரசியல் விஞ்ஞானம் (த) |

### வியாழக்கிழமை

| | |
|---|---|
| 04.00 - 04.55 | தரம் - 12 பொருளியல் (த) |
| 05.00 - 05.55 | தரம் - 13 பொருளியல் (த) |
| 06.00 - 06.55 | தரம் - 12 கணக்கீடு (த) |
| 08.00 - 08.55 | தரம் - 08 தமிழ் (த)(1ஆம், 2ஆம்)<br>தரம் - 08 வரலாறு (த)(2ஆம், 4ஆம்) |
| 09.00 - 09.55 | தரம் - 09 தமிழ் (த)(1ஆம், 2ஆம்)<br>தரம் - 09 வரலாறு (த)(1ஆம், 2ஆம்) |
| 10.00 - 10.55 | தரம் - 10 விஞ்ஞானம் (த) |
| 11.00 - 11.55 | தரம் - 11 விஞ்ஞானம் (த) |
| 12.00 - 12.55 | தரம் - 12 இணைந்த கணிதம் (த) |
| 13.00 - 13.55 | தரம் - 13 இணைந்த கணிதம் (த) |
| 14.00 - 14.55 | தரம் - 07 தமிழ் (த) (1ஆம், 2ஆம்)<br>தரம் - 07 வரலாறு (த) (2ஆம், 4ஆம்) |
| 15.00 - 15.55 | தரம் - 12 வணிகக்கல்வி (த) |
| 16.00 - 16.55 | தரம் - 13 வணிகக்கல்வி (த) |
| 17.00 - 17.55 | தரம் - 13 கணக்கீடு (த) |
| 18.00 - 18.55 | தரம் - 06 சிங்களம் (த) (1ஆம், 2ஆம்)<br>தரம் - 06 வரலாறு (த) (2ஆம், 4ஆம்) |
| 22.30 - 23.25 | தரம் - 12 விவசாய விஞ்ஞானம் (த) |
| 23.30 - 24.30 | தரம் - 13 விவசாய விஞ்ஞானம் (த) |

### சனிக்கிழமை

| | |
|---|---|
| 04.00 - 04.55 | தரம் - 12 தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் |
| 05.00 - 05.55 | தரம் - 13 தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் |
| 06.00 - 06.55 | தரம் - 12 உயிரியல் |
| 08.00 - 08.55 | தரம் - 10 தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் |
| 09.00 - 09.55 | தரம் - 11 தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் |
| 10.00 - 10.55 | தரம் - 10 தமிழ் |
| 11.00 - 11.55 | தரம் - 11 தமிழ் |
| 12.00 - 12.55 | தரம் - 12 இரசாயனவியல் |
| 13.00 - 13.55 | தரம் - 13 இரசாயனவியல் |
| 14.00 - 14.25 | தரம் - 06 தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் (1ஆம், 2ஆம்)<br>தரம் - 07 தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் (2ஆம், 4ஆம்) |
| 14.30 - 15.55 | தரம் - 08 தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் (1ஆம், 3ஆம்)<br>தரம் - 09 தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் (2ஆம், 4ஆம்) |
| 15.00 - 15.55 | தரம் - 12 தமிழ் |
| 16.00 - 16.55 | தரம் - 13 தமிழ் |
| 17.00 - 17.55 | தரம் - 13 உயிரியல் |
| 18.00 - 18.55 | தரம் - 08 ஆங்கிலம் (1ஆம், 3ஆம்)<br>தரம் - 09 ஆங்கிலம் (2ஆம், 4ஆம்) |
| 22.30 - 23.25 | தரம் - 12 பொறியியல் தொழிநுட்பம் |
| 23.30 - 24.30 | தரம் - 13 பொறியியல் தொழிநுட்பம் |

### ஞாயிற்றுக்கிழமை

| | |
|---|---|
| 04.00 - 04.55 | தரம் - 10 கத்தோலிக்கம் (1ஆம், 3ஆம்)<br>தரம் - 11 கத்தோலிக்கம் (2ஆம், 4ஆம்) |
| 06.00 - 06.55 | தரம் - 10 சைவநெறி (1ஆம், 3ஆம்)<br>தரம் - 11 சைவநெறி (2ஆம், 4ஆம்) |
| 09.00 - 09.55 | தரம் - 10 வரலாறு (1ஆம், 3ஆம்)<br>தரம் - 11 வரலாறு (2ஆம், 4ஆம்) |
| 11.00 - 11.55 | தரம் - 10 இஸ்லாம் (1ஆம், 3ஆம்)<br>தரம் - 11 இஸ்லாம் (2ஆம், 4ஆம்) |
| 12.00 - 12.55 | தரம் - 03 தமிழ் |
| 12.30 - 12.25 | தரம் - 03 கணிதம் (1ஆம், 3ஆம்) மற்றும் சுற்றாடல்சார் செயற்பாடுகள் (2ஆம், 4 ஆம் |
| 13.00 - 13.25 | தரம் - 04 கணிதம் |
| 13.30 - 13.55 | தரம் - 04 தமிழ் (1ஆம், 3ஆம்) மற்றும் சுற்றாடல்சார் செயற்பாடுகள் (2ஆம், 4 ஆம் |
| 14.00 - 14.25 | தரம் - 05 கணிதம் (1ஆம், 3ஆம்) மற்றும் ஆங்கிலம் (2ஆம், 4 ஆம் |
| 14.30 - 14.55 | தரம் - 05 தமிழ் (1ஆம், 3ஆம்) மற்றும் சுற்றாடல்சார் செயற்பாடுகள் (2ஆம், 4 ஆம் |
| 18.00 - 18.55 | தரம் - 10 ஆங்கிலம் (1ஆம், 3ஆம்)<br>தரம் - 11 ஆங்கிலம் (2ஆம், 4ஆம்) |
| 23.30 - 24.30 | தரம் - 10 கிறிஸ்தவம் (1ஆம், 3ஆம்)<br>தரம் - 11 கிறிஸ்தவம் (2ஆம், 4ஆம்) |

# கிளிநொச்சி – பள்ளிக்குடாவில் இருவருக்கு கொரோனா உறுதி!



கிளிநொச்சி – பூநகரி, பள்ளிக்குடா கிராமத்தில் இருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பூநகரி பிரதேசத்தைச் சேர்ந்த ஒன்பது பேரும், பளை மற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவருமாக பதினொரு பேர், வெளிநாடு செல்வதற்காக கொழும்புக்குச் சென்று தங்கியிருந்தபோது அவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது பி.சி.ஆர்.முடிவுகள் வெளிவர முன்னர் குறித்த இளைஞர்கள் வானொன்றில் கொழும்பிலிருந்து சொந்த ஊர்களுக்கு கடந்த (திங்கட்கிழமை) இரவு திரும்பியிருக்கின்றனர்.

இந்நிலையில் அவர்களில் யாழ்ப்பாணம், அளவெட்டியைச் சேர்ந்த ஒருவருக்கும், கிளிநொச்சி பூநகரி பள்ளிக்குடாவைச் சேர்ந்த இருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, கொழும்பிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில் உடனடியாகஇளைஞர்கள், கிளிநொச்சி – கிருணபுரம் வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

அத்தோடு வானில் பயணித்த ஏனையவர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# நிலைபேண் தகு அபிவிருத்திகள் கொள்கை பூரணப்படுத்த தீர்மானம்

நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்குகள் 17 இல் அதிகமானவற்றைப் பூர்த்தி செய்வதற்குப் பல சவால்கள் நிலவுகின்றன என 2020 ஆம் ஆண்டுக்கான உலக நிலைபெறுதகு அபிவிருத்தி அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தச் சவால்கள் தொடர்பில் ஆராயவும், நிலைப்பேண்தகு அபிவிருத்திக் கொள்கைகளைப் பூரணப்படுத்தவும் பிரதமரும், வெளிவிவகார அமைச்சரும் முன்வைத்த ஒன்றிணைந்த யோசனைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை அமர்வின்போது இலங்கை உள்ளிட்ட 193 நாடுகள் நிலைபேண்தகு அபிவிருத்தி 2030 இற்கான நிகழ்ச்சி நிரல் அங்கீகரித்தன. அதன் மூலம் அடையாளங் காணப்பட்டுள்ள நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்குகள் 17 அதிகமானவற்றைப் பூர்த்தி செய்வதற்குப் பல சவால்கள் நிலவுகின்றன என 2020 ஆம் ஆண்டுக்கான உலக நிலைபேண்தகு அபிவிருத்தி அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது..

நிலைப்பேறாண இலக்குகளை நடைமுறைப்படுத்துவதில் உள்ள சவால்களை ஆராய பிரதமரின் ஒப்புதலுடன் வெளிவிவகார அமைச்சு செயற்பாட்டுக் குழுவொன்றை நியமித்துள்ளது. இந்தக்குழு நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான செயன்முறையை மேற்கொள்வதற்காக உயர்மட்ட அரசியல் தலைமைத்துவத்தின் தேவையை சுட்டிக்காட்டியுள்ளது.

இதற்கமைய நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான செயன்முறைக்கு தலைமைத்துவம் வழங்குவதற்கும் வழிகாட்டுவதற்கும் பிரதமரின் தலைமையில் ஏற்புடைய அமைச்சர்கள் இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் அமைச்சுக்களின் செயலாளர்கள் அடங்கலாக பிரதமரும், வெளிவிவகார அமைச்சரும் இணைந்து சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# லிந்துலையில் 10 பேருக்கு கொரோனா தொற்று உறுதி!

நுவரெலியா மாவட்டத்திலுள்ள லிந்துலை சுகாதார பிரிவில் நேற்றுமுன்தினம் (செவ்வாய்க்கிழமை) 10 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதன்படி லிந்துலை ராணிவத்தை தோட்டம், மவுசாஎல்ல தோட்டம், நோனா தோட்டம், வோல்ட்றீம் தோட்டம், அக்கரப்பத்தனை தொன்பீல்ட் ஆகிய தோட்டங்களில் தலா ஒரு தொற்றாளர்கள் வீதம் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் கொழும்பில் இருந்து வருகை தந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஏனைய ஐந்து தொற்றாளர்களும் லிந்துலை தியனலகல தோட்ட பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் இவர்கள் வட்டவளை ஆடைத் தொழிற்சாலை கொத்தணியுடன் தொடர்புடையவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# சைவமும் தமிழுமே தம் கண்கள் என வாழ்ந்த

ப்ரியமதா பயஸ்

# சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி



**சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் 96 ஆவது ஜனனதினம் இன்றாகும். அதையொட்டி அவரது அரும் பணிகளை மீட்டுப் பார்க்கின்றது இக்கட்டுரை.**

> நூற்றுக்கணக்கான ஆதரவற்ற பெண் குழந்தைகளின் கல்விக்கு ஒளியூட்டி அவர்களின் வாழ்க்கை பாதையை சீரமைத்தார் அப்பாக்குட்டி தங்கம்மா.

கந்தபுராண கலாசாரம் மேலோங்கும் இடமாக இருக்கும் யாழ்ப்பாணத்தில் விவசாய வளம் கொழிக்கும் மல்லாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தும் சைவத்தமிழ்ப் பெண்களில் முதன்மையான சமூக,சமய சேவகி ஆவார். இலங்கையில் சைவமும் தமிழும் என்று பேசப்படின் அதில் தங்கம்மா அப்பாக்குட்டியின் பெயர் தவிர்க்கமுடியாத ஒரு முதன்மையான இடம்பெறும். அவரின் சமய, தமிழ் மொழி சேவை என்பது மிகுந்த போற்றுதலுக்குரியது. சமயமும் தமிழும் வாழும்வரை நாம் போற்றிப் புகழ வேண்டிய ஒருவராக செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் இன்றும் மிளிர்கிறார். இவரின் இடத்தை இட்டு நிரப்ப இன்னமும் யாரும் இல்லை என்பது உண்மையான விடயம் .

சிவஞான வித்தகர், திருவாசகக் கொண்டல், சிவத்தமிழ்ச் செல்வி, சித்தாந்த ஞானாகரம், சைவதரிசனி, திருமுறைச் செல்வி, சிவமயச் செல்வி, தெய்வத் திருமகள் உட்படப் பல கௌரவங்கள் பெற்றவர் தங்கம்மா அப்பாக்குட்டி.

சைவத்திற்கும் தமிழுக்கும் தன்னை அர்ப்பணிந்து வாழ்ந்த இவர் 1925 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 07 ஆம் திகதி யாழ்ப்பாணத்தின் தெல்லிப்பளையில் தையல் பிள்ளை – அப்பாகுட்டி தம்பதியினருக்கு மகளாகப் பிறந்தார். இவரின் தந்தை ஒரு ஆசிரியர். சிறந்ததோர் சைவச் சூழலில் வளர்ந்த தங்கம்மா அனைவரும் பயனடையும் அரிய பூவுலக வாழ்க்கையை இவ்வுலகில் வாழ்ந்து மறைந்திருக்கிறார்.

பண்டிதர், சைவப்புலவர் என்கின்ற மகத்தான பட்டங்களைப் பெற்றுக்கொண்ட ஆசிரியராக இருந்த தங்கம்மா அப்பாக்குட்டி பல ஆண்டுகள் ஆசிரியர் சேவையில் இருந்து சமூகத்தை வளப்படுத்தியவர் .

தங்கம்மா என்கின்ற தன்பெயரால் அன்றி தங்கம்மா அப்பாக்குட்டி எனத் தந்தையின் பெயரோடும் சேர்த்து இவர் தன்னுடைய பேச்சுத் திறத்தால் இலங்கை, இந்தியா, மலேசியா, இங்கிலாந்து முதலான நாடுகளில் பெரும்புகழ் பெற்றுள்ளார்.

தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் பத்து ஆண்டுகள் நிர்வாக பொருளாளராக இருந்த தங்கம்மா அப்பாக்குட்டி 1977ஆம் ஆண்டு தொடக்கம் தலைவராகப் பணியாற்றி இருந்தார். இவரது காலத்தில் தெல்லிப்பழை துர்க்கையம்மன் தேவஸ்தான பேரருளோடு எழுச்சி பெற்று வலிகாமம் வடக்கில் ஆலயச்சூழல் துர்க்காபுரம் எனும் சிறப்பு பெயர்பெறும் அளவுக்கு வளர்ச்சி பெற்றமை சிறப்பான விடயமாகும். நிர்வாக திறமையும் பேச்சாற்றலும், சிறந்த சமூக நாள் நோக்கமும் அவரின் ஆயுள் காலத்தை நீடித்துக்கொண்டே இருந்தது.

குடும்பம் என்கின்ற இல்லறவாழ்வை ஒதுக்கி நூற்றுக்கணக்கான ஆதரவற்ற பெண் குழந்தைகளின் கல்விக்கு ஒளியூட்டி அவர்களின் வாழ்க்கை பாதையை சீரமைத்தார் அப்பாக்குட்டி தங்கம்மா.

தான் பிறந்து வளர்ந்த ஊரில் ஆசிரியப் பணி, சமூகப் பணி என முதன்மையுடன் விளங்கி குறிப்பிட்ட சில வருடங்களில் சமயதோடு தன்னை அர்ப்பணித்து ஆலய அறங்காவல்பணி, சொற்பொழிவுப் பணி ஆகிய பன்முகப் பணிகளுடம் தன்னை ஈடுபடுத்தி சமூக, சமய மறுமலர்ச்சிக்கு அயராது உழைத்தார்.

தான் தலைமை தாங்கும் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயம் அறக் கோட்டமாக விளங்க இறை பணியுடன் மக்கள் சேவையையும் கல்வி உதவிகளையும் சிரம் மேற்கொண்டு முன் மாதிரியான சேவையைச் செய்தவர் இந்த சிவத் தமிழ் செல்வி .

துர்க்கை அம்மன் ஆலயத்தில் மகளிர் இல்லம், அன்னையர் இல்லம், சைவத்தமிழ் ஆய்வு நூலகம் என்பவற்றினூடாக இவர் ஆதரவற்றோர்க்குச் செய்தசேவைகள் இன்னமும் கோடி வருடங்கள் பேசப்பட்டுக்கொண்டே இருக்க வேண்டிய சேவைகள். சைவப்புலவர் தங்கம்மாவின் சமய, சமூகப் பணிகளைக் கௌரவிக்கும் முகமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 1997 ஆம் ஆண்டு இவருக்கு கலாநிதிப்பட்டம் வழங்கிக் கௌரவித்தது.

இவர் பலநூல்களின் ஆசிரியராகவும் பல பழம் பெரும் நூல்களின் பதிப்பாசிரியராகவும் திகழ்கிறார். சிங்கப்பூர், மலேசியச் சொற்பொழிவு, இலண்டனில் ஏழுவாரம், பத்துச் சொற்பொழிவு, கந்த புராணச் சொற்பொழிவுகள் முதலானவை இவரது நூல்களாக இருக்கின்றன .

இவரைத் தலைவியாகக் கொண்ட நூல்கள் பல. மணிவிழா மலர், சிவத்தமிழ் இன்பம், பவளவிழா மலர், தங்கம்மா நான் மணிமாலை, தங்கத்தலைவி முதலான பல நூல்களும் கவிதைகளும் நூற்றுக்கணக்கில் இருக்கின்றன. அவற்றைப் பேணிப் பாதுகாப்பதும் அதன் வழி நடப்பதும் நம் சமூகத்தின் கடமையாக கூட இருக்கின்றது .

இவற்றை விட சமய ஆசார அனுட்டானங்களை கூறும் பெரியபுராண வசனம், அரியவும் பெரியவும் பகுதி – 1, பகுதி – 2 , சைவபோதம், அபிராமி அந்தாதி, கந்தபுராணச் சுருக்கம், சைவக் கிரியைகளும் விரதங்களும் முதலான பல சமய நூல்கள் இவரால் பதிப்பிக்கப் பெற்ற சிறந்த நூல்களாக இருக்கின்றன.

சில வருடங்களாக நோய் வாய்ப்பட்டு யாழ். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த தங்கம்மா அப்பாக்குட்டி 2008 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் காலமானார். அவர் இறக்கும் போது அவருக்கு 83 வயது .

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய நிர்வாகியாக இருந்து சைவத்துக்கும் தமிழுக்கும் பெரும் தொண்டாற்றிய தங்கம்மா அப்பாக்குட்டி ஏழை மக்களுக்கும் அநாதைப் பிள்ளைகளுக்கும் ஆதரவு இல்லங்கள் அமைத்து சேவையாற்றி வந்த கனிந்த தமிழன்னை என்பது போற்றுதலுக்குரியது.

பல நாடுகளுக்கும் சென்று சைவ சொற்பொழிவுகள் ஆற்றியும் தன்னால் நடாத்தப்படும் இல்லங்களுக்கு நிதி திரட்டியும் இறக்கும் வரை தனது சமூகப் பணியைச் செய்து வந்த பெருந்தகை தங்கம்மா அப்பாக்குட்டி.

**கருணாநிதி இரங்கல்**

அவரின் மறைவுக்கு அப்போதைய தமிழக முதல்வராக இருந்த கருணாநிதி இரங்கல் தெரிவித்திருந்தார்.

தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் இறப்புக்கு தமிழக முதல்வர் கருணாநிதி வெளியிட்ட அறிக்கையில் –

இலங்கையில் சமூக சேவகியாக திகழ்ந்த தங்கம்மா அப்பாக்குட்டி இயற்கை எய்திய செய்தியறிந்து மிகவும் வேதனை அடைகிறேன்.

தங்கம்மா அப்பாக்குட்டி, தமிழ் மொழியை முறைப்படி கற்று ஆசிரியராக விளங்கியவர். தமிழ்ப் பண்டிதை என ஈழப் பகுதி வாழ் தமிழ் மக்களால் அன்புடன் அழைக்கப்பட்டவர். திருமணம் செய்துகொள்ளாமல் சமூக சேவகியாகவே வாழ்ந்தவர். நூலகம் ஒன்றை நிறுவி சிறந்த நூல்கள் வெளியிடுவதற்கும் உதவிகள் புரிந்துள்ளார்.

ஆசிரியப் பணி, சமூகப் பணி மூலம் அன்பிற்குரியவராகத் திகழ்ந்த பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி மறைவு ஈழத் தமிழ் மக்கள் அனைவருக்கும் ஈடுசெய்ய முடியாத ஒரு பேரிழப்பாகும்.

அவரது பிரிவால் வருந்தும் தமிழ் மக்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். – என்று தெரிவித்திருந்தார்.

தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் 96 ஆவது ஜனன தினமான இன்று அவர்களின் சேவையையும் தொண்டையும் போற்றுவோம். வாழ்க தமிழ். நிலை பெறுக அவரின் சேவையும் புகழும்.

## "தவப் பெருந்தேவி"

**சிவத்தமிழ் மணங்கமழத் தவப்பெருந்தேவியாய்
செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மா;
ஸ்ரீதுர்க்கா தேவியின் திருவருள் பேறெனச்
சிவநெறி காக்க வந்தார்;**

**நவயுக காலத்தையும் வென்று தவம் பேணிய
நல்லறம் பெருக்கலானார்;
நாளைய சந்ததி கோழையாய் இல்லாமல்
நறுக்காக வாழ வழி சமைத்தாய்;**

**பவப்பிணி தீரவே புராணபடனம் ஆற்றும்
பணியினைப் பேறாக்கினாய்;
பணம் பொருள் திருப்பணி எதுவாயினும் தூய
பரிபாலனம் முன் மொழிந்தாய்;**

**உவமானமான இனியொருவரை இவர்போல
ஒருவரைத் தேடுகின்றோம் தாயே;
ஒப்பிலாத் தெல்லியூர் வாழும் ஸ்ரீ துர்க்கையே
ஒளிவிளக்கே தங்கம்மா!**

**– கே.எஸ்.சிவஞானராஜா –**

காலைக்கதிர்
Kalaikkathir



# சாயி வந்தனன் வாழ்வு தந்தனன்

- வே.வரதசுந்தரம் -

# பாபாவைப் பார்த்தால் போதும் துயரங்கள் பறந்தே போகும்!

**உலகில் ஒரேயொரு மதமுண்டு. அது அன்பென்னும் மதம்.**
**உலகில் ஒரேயொரு ஜாதியுண்டு. அது மனிதகுலம்.**
**உலகில் ஒரேயொரு மொழிதான் உண்டு. அது இதயத்தின் மொழி.**
**உலகத்தில் ஒரேயொரு கடவுள்தான் உண்டு.அவர் எங்கும் வியாபித்து இருக்கிறார்.**



பகவான் பாபா இவ்வாறுகூறி ‘ஒன்றேகுலம் ஒருவனே தேவன்’ என்னும் வேற்றுமையில் ஒற்றுமை காணும் அனைத்துலக ஒருமைப்பாட்டினை வலியுறுத்துவார். உலகளாவிய சாயிநிலையங்கள் பல்வேறு சமய சின்னங்களை இணைத்து தங்கள் இலச்சினையாக ஏற்றுக்கொண்டுள்ளன.

இந்துசமய சின்னம் பிரணவ மந்திரம். எங்கள் இதயங்களிலும் பிரபஞ்சத்தின் இதயத்திலும் ஒலிப்பதைக் குறிக்கும். அவ்வாறே கிறித்துவ மதத்தின் சின்னமாம் சிலுவை நான் என்னும் அகங்காரம் அழிதலைக் குறிக்கும். புத்தமதச் சின்னமாம் சக்கரம் நமக்குக் கர்மா காரணி ஆகவும், விளைவாகவும் அமைவதைக் குறிக்கும். மனம் அங்கிங்கென அலையாமல் விண்மீன் நட்சத்திரம்போல் சமய நம்பிக்கையில் உறுதியாக இருத்தலை இஸ்லாமிய சமயச் சின்னம் இயம்பி நிற்குகும். சொரஷ்றியன் சமயச் சின்னமாம் தீ உந்தன் பாவங்களை, தீயசெயல்களை நெருப்பில் எரித்து நீராக்கு என்று போதிக்கும்.

## புட்டபர்த்தி புகட்டிய பாடம்!

இவ்விலச்சனை பகவான் பாபா நமக்குப் போதிக்கும் அனைத்துலக ஒருமைப்பாட்டினைக் குறிக்கும்.

பாபாவின் தரிசனம் கிடைப்பின், நாம் உண்மையிலேயே பாக்கியசாலிகள். பிரசாந்தி நிலையத்தில் பாபா எம்மைக் கடந்து செல்கையில் பாபாவின் பேரருட் பிரவாகம் அவரிடமிருந்து வெளியேறும்.

நாம் உடனே மற்றவர்களுடன் கதைப்பின் அந்த சக்தி வீணாகி அவரிடமே மீண்டும் சென்றுவிடும். நோயினால் நலிவுற்றும், வறுமையில் வாடியும், வணிகத்தில் முதலிழந்து மனம் சோர்வுற்றும், உற்றார் உறவினர் மரணத்தினால் சோகத்தில் உழன்றும் என்செய்வோம்! என்செய்வோம்! என்றேங்கி கையறுநிலையில் சாயீஸ்வரம் வரும் சாயி அடியார்கள் பாபாவைப் பார்த்தாலே போதும், துன்பங்கள் பறந்தே போகும்.

பாபாவின் அதிசயமொன்று காணீர்! பகவான் பாபாபின் பார்வை யார்மீது விழுகிறதோ, அந்த நபர் புத்தூக்கம் பெறுகிறார். அவரிடத்து மனமாற்றம் ஏற்படுகிறது. நாளாக நாளாக நாம் வேறுமனிதர்கள் ஆகிறோம். பாபா நமது முன்னிலையில் உலாவிவருவது உண்மையிலேயே வானுலகத்துத் தேவர்கள் நாடும் தரிசனம் அல்லவா? இத்தகைய தரிசனத்துக்கு நாம் நன்றியாக இருத்தல் வேண்டும்.

பாபாதரிசனம் கிடைத்துத் தமதெண்ணம், வாழ்வு புதுமெருகு பெற்றுப் பூரிப்படையும் பல பக்தர்களில் வார்னர் என்ற அமெரிக்கப் பெண்ணுமொருவர். இதோ அவர் பேசுகிறார்:-

‘நான் முதன்முதலில் பாபாவைப் பற்றிக் கேள்விப்பட்டது 1984ஆம் ஆண்டில். ஒரேயொரு வசனத்தில் சொல்வதனால்



அதனால் எனது வாழ்வே மாறிவிட்டது. நம்பிக்கையுடனும், அகங்காரத்துடனும் எனது சிறுபிராயம் கழிந்தது. நியூயோர்க் போட்டி உணர்வு மேலோங்கி இருந்த மத்தியதர வர்க்கத்தில் நான் பிறந்தேன். எனது தந்தையார் உயர்நீதி மன்ற நீதியரசர். எனது சகோதரன் தொலைக்காட்சித் துறையில் பிரபல்யம் அடைந்த ஊடகவியலாளர். நீண்டகாலத் தாம்பத்திய உறவினால் ஏற்பட்ட திருப்தி. இரு குழந்தைகள், அற்புதமான நண்பர்கள், போதிய செல்வம். நல்லவெற்றி. இப்படி எத்தனையோ நாற்பத்தி மூன்றாவது வயதில் எனது சொத்தாகிவிட்டன. இருப்பினும் என்னிடம் ஏதோ ஒருகுறை இருப்பதாக உணர்ந்தபடி இருந்தேன்.

‘தன்னிலும் பெரிதாக ஒரு சக்தியுடன் எமக்கு ஓர்இணைப்பு ஏற்படாத இடத்து நமக்குப் பரிபூரண திருப்தி ஏற்படாது’ என்பதை நான் உணரத் தலைப்பட்டேன். ஓராண்டின் பின்னர் பாபா பற்றி இரு நூல்களை வாசிக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. பாபா கூறும் வாழ்வின் விழுமியங்கள் என்னைக் கவர்ந்தன. இந்தப் பின்னணியில் நான் எனது நண்பருடன் இந்தியா சென்றேன். ஆசிரமத்தில் முதல்நாள் பாபாவைச் சந்திக்க முடியவில்லை. இரண்டாவது நாள் அந்த வாய்ப்புக் கிடைத்தது. தரிசனத்தின் போது பாபா ஆசீர்வதிப்பார். கடிதங்களை ஏற்பார். இவற்றை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்தேன்.

பாபா பற்றிய விசாரணையில் மூளையைப் போட்டுக் குழப்புவதை விடுத்து உன்னுள்ளே இறைவனைக் காண முயல வேண்டும் என்ற தெளிவு பிறந்தது. எனது வாழ்வில் பின்னர் உருவான கேடுகளை எண்ணிப் பார்த்தேன். எனது பெற்றோரை முப்பதாவது வயதுக்கு முன்னரே இழந்து விட்டேன். எனது சகோதரன் 1979இல் விமான விபத்தில் இறந்து விட்டான். எனது 35ஆவது வயதில் எனது உடலில் ஒரு கட்டியை அறுவை சிகிச்சை மூலம் நீக்க வேண்டியிருந்தது.

அனைத்தும் என்னால் இயலாது போனபோது, ‘என்னால் இனிஎதையும் செய்ய முடியாது. உனது விருப்பமே நடைபெறட்டும்’ என்று இறைவனிடம் தஞ்சம் அடைந்தேன்.

‘நீ நல்லவள். ஆனால் நீ மற்றவர்கள் உணர்வுகளை உள்ளத்தைச் சுடும்வண்ணம் சொற்களை பேசுகிறாய். அதுவும் அளவுக்கு அதிகமாக!’ இப்படி ஒருநாள் பாபா என்னை எச்சரித்தார். நான் சுயவிமர்சனத்தில் இறங்கினேன். எனது நடத்தையைச் சிந்தித்துப் பார்க்க பாபா ஒருசந்தர்ப்பத்தைத் தந்தார். உண்மைநிலை விளங்கியது. அதன் பயனாக என்னிடத்தே அமைதி நிலவியது. முழுநாளும் உணவு அருந்தும்போது, பஜனைக்குக் காத்திருக்கும், போது வரிசையில் நிற்கும்போது மௌனம் காத்தேன். சுமார் ஆறு நான்கள் என்னைப் பற்றி, எனது தேவைகள் பற்றி நான் கிஞ்சித்தேனும் சிந்திக்கவில்லை. அப்போது ஒரு தெளிவு பிறந்தது. எனது சிந்தனை உள்நோக்கிச் சென்றது. துன்பம், நோவு போன்றவற்றை வரவேற்க நாம் பழகிக் கொள்ளவேண்டும். துன்பப்படுவது ஆன்மீகப் பயணத்தில் ஏற்படும் நிகழ்வு. நான் அனுபவிக்கும் இன்பியல், துன்பியல் நிகழ்வுகளுக்கு அப்பால் மனம், வாக்கு, காயத்துக்கு எட்டாத பரிபூரண நிலை நம்மைக் காத்திருக்கிறது.’

‘இதுவே புட்டபர்த்தி எனக்குப் புகட்டிய பாடம்!’ – இவ்வாறு கூறுகிறார் வார்ணர்.

(தொடரும்....)

# உக்ரேன் பிரஜைகளினால் 3 ஆவது கொரோனா அலை!

## எச்சரிக்கின்றது ஐ.தே.க.

நாட்டில் இரண்டாவது கொரோனா அலை உருவானமைக்கு உக்ரேன் பிரஜைகள் காரணமாக இருக்கலாம் என்று அரசாங்கம் கூறியது. ஆனால் தற்போதும் சுற்றுலாத்துறையை ஆரம்பித்து வைப்பதற்கு அந்நாட்டு பிரஜைகளே வரவழைக்கப்பட்டுள்ளனர்.

இதன் மூலம் உக்ரைன் பிரஜைகளூடாகவே இலங்கையில் மூன்றாவது கொரோனா அலையும் உருவாகிவிடுமா என்ற சந்தேகம் நிலவுவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.சி.அலவத்துவல தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் –

மினுவாங்கொடை கொத்தணி இரண்டாம் அலையாகத் தீவிரமாக பரவியுள்ளது. இதனைத் தொடர்ந்து சிறைச்சாலை கொத்தணி, பொலிஸ் கொத்தணி என பல கொத்தணிகள் உருவாகின. இரண்டாம் அலைக்கு உக்ரேன் பிரஜைகள் சிலரின் வருகை காரணமாக இருக்கும் என்று அரசாங்கம் கூறியது.

அவ்வாறெனில் தற்போது அவர்களால் மூன்றாம் அலையும் உருவாகிவிடுமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. இது இவ்வாறிருக்க தற்போது உதயங்க கொத்தணியும் உருவாகியுள்ளது. இந்த கொத்தணியில் உக்ரேனிலிருந்து வந்த 6 சுற்றுலா பிரயாணிகளுக்கு தொற்றுறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்த ஆறு பேருக்கும் கொரோனா வைரஸிப் புதிய வகை தொற்று பரவியுள்ளதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. 10 லட்சத்திற்கும் அதிகமான தொற்றாளர்கள் காணப்படுகின்ற நாடாக உக்ரேன் காணப்படுகிறது.

இவ்வாறிருக்கையில் எதற்காக அந்த நாட்டிலிருந்து சுற்றுலா பிரயாணிகள் வரவழைக்கப்பட்டனர்? ஆனால் இந்தியா, பங்களாதேஷ் உள்ளிட்ட பல நாடுகள் வெளிநாடுகளில் சிக்கியுள்ள தமது நாட்டு பிரஜைகளைப் பாதுகாப்பாக மீட்கும் நடவடிக்கைகளுக்கே முக்கியத்துவம் கொடுக்கின்றன.

மிக கொடுக்கல், வாங்கலை பின்புலமாகக் கொண்டுதான் உக்ரைன் பிரஜைகள் நாட்டுக்கு அழைக்கப்பட்டுள்ளனரா என்ற சந்தேகம் எமக்கு எழுந்துள்ளது. இந்த அரசாங்கம் தமது சகாக்களுக்கு உதவும் வகையில் பல மோசடிகளில் ஈடுபட்டுள்ளது. இதற்கு சிறந்த உதாரணம் சீனி வரி நீக்கமாகும். இவ்வாறான செயற்பாடுகள் மூலம் அரசாங்கம் எதிர்பார்ப்பது என்ன?

அரசாங்கத்தை நம்பி வாக்களித்த 69 லட்சம் மக்கள் ஏமாற்றப்பட்டுள்ளார்கள். சீனி மாத்திரமல்ல, விலை நிர்ணயிக்கப்பட்டு வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட எந்தவொரு பொருளும் அந்த விலைக்கு மக்களுக்கு விற்பனை செய்யப்படுவதில்லை.

கொவிட் தடுப்பு மருந்தை பெற்றுக் கொள்ள உலக நாடுகள் பொறுப்புடன் செயற்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில் இலங்கையிலுள்ள அமைச்சர்கள் தடுப்பு மருந்தைப்பெற்றுக்கொள்ள அவசரப்படத் தேவையில்லை என்றும், சிலர் எமக்கு தடுப்பு மருந்தே தேவையில்லை என்றும் கூறுகிறார்கள்.

கொவிட் கட்டுப்பாடு தொடர்பாக அரசாங்கத்துக்கு எவ்வித அக்கறையும் கிடையாது. மாறாக தமது சகாக்களுக்கு எவ்வாறு பயன் பெற்றுக் கொடுப்பது என்பதிலேயே அரசாங்கம் அவதானம் செலுத்துகிறது. சுற்றுலாத்துறையை ஆரம்பிப்பதாகக் கூறிவிட்டு தற்போது உள்நாட்டு சாரதிகளை நெருக்கடிக்குள் தள்ளியுள்ளனர். ஆனால் சுற்றுலா பிரயாணிகள் தமது சுற்றுலாவைத் தொடர்கிறார்கள். – என்றார்.

# தமிழ் பிரதேசங்களில், தமிழ் மொழியின் பயன்பாடு: அமைச்சர் டக்ளஸ் வெளியிட்டுள்ள முக்கிய வழிகாட்டல்

வடக்கு கிழக்கு பிரதேசங்களில் வெளியிடப்படுகின்ற வெளியீடுகள் அனைத்தும் அந்தப் பிரதேச மக்களுக்கு விளங்கிக் கொள்ளும் வகையில் அமைய வேண்டும். மத்திய அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படுகின்ற திட்டங்களுக்கான பெயர்கள் அனைத்தையும், வடக்கு கிழக்கு பிரதேசத்தில் தமிழிலேயே பயன்படுத்த வேண்டும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அரசாங்க திணைக்களங்களின் பிரதேச அதிகாரிகள் தேவையற்ற அசௌகரியங்களை தவிர்க்கும் வகையில் செயற்பட வேண்டும். தமிழ் பிரதேசங்களில் தமிழ் மொழியை முழுமையாக செயற்படுத்துவதில் ஏதாவது நடைமுறைச் சிக்கல்கள் இருப்பின் தன்னுடைய கவனத்திற்கு கொண்டு வருமாறும் அதிகாரிகளைக் கேட்டுக் கொள்கிறார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் கிளிநொச்சி மாவட்ட இளைஞர்களுக்கு வழங்கப்பட்ட சான்றிதழ்கள் சிங்கள மொழியில் மாத்திரம் எழுதப்பட்டிருந்த நிலையில் ஏற்பட்ட அசௌகரியங்கள் தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்புக்களுடன் திங்களன்று கலந்துரையாடப்பட்ட போதே கடற்றொழில் அமைச்சரால் இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அமைச்சின் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் கிளிநொச்சி மாவட்டத்தில் நடத்தப்பட்ட வீட்டுத் தோட்டப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான சான்றிதழ்கள், பிரதேச மக்கள் புரிந்து கொள்ளக் கூடிய மொழியில் தயாரிக்கப்பட்டு விரைவில் அனுப்பி வைக்கப்படும் என தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வெற்றியாளர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கு நிகழ்வு கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெற்ற நிலையில், சான்றிதழ்கள் சிங்கள மொழியில் மாத்திரம் அச்சிடப்பட்டிருந்தமையால் எழுதப்பட்டிருந்த விடயங்களைப் புரிந்து கொள்ள முடியாத இளைஞர்கள் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மாவட்ட அதிகாரிகளுக்கு தமது அதிருப்தியை வெளிப்படுத்தினர்.



ஏற்கனவே, மேற்கொள்ளப்படுகின்ற வேலைத் திட்டங்கள் அனைத்திலும் தமிழ் மொழி முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும் என்று கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் அரசாங்க அதிகாரிகளுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பிரதமரின் கொழும்பு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் நியமனம்!



பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வின் கொழும்பு மாவட்ட ஒருங்கிணைப்பாளராக ஏ.எம்.டீ.எச்.தனசிறி அமரதுங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவால் விஜேராமவிலுள்ள அவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் வைத்து அவருக்கான நியமனம் வழங்கி வைக்கப்பட்டது.

ஏ.எம்.டீ.எச்.தனசிறி அமரதுங்க தெஹிவளை, கல்கிஸ்ஸ மாநகர சபையின் முன்னாள் மேயர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## கொரோனா சிகிச்சை நிலையமாக மாறுகிறது கொக்கலை ஹோட்டல்

கொக்கலையில் அமைந்துள்ள லோங்பீச் ஹோட்டல் கொரோனா நோயாளர்களுக்குச் சிகிச்சை அளிக்கும் வைத்தியசாலையாக மாற்றப்பட்டுள்ளது.

மேலும் அங்கு இன்று (வியாழக்கிழமை) முதல் சிகிச்சைகள் ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில், அதன் நடவடிக்கைகள் இராணுவத்தினரின் கீழ் இடம்பெறும் என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

அதன்படி, கொரோனாத் தொற்றாளர்களுக்குப் பணம் செலுத்தி அங்கு சிகிச்சையைப் பெற்றுக்கொள்ள முடியும் என அவர் தெரிவித்தார்.

## தோட்டத் தொழிலாளர் விவகாரம்: மஸ்கெலியாவில் நேற்று போராட்டம்




மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை நாள் சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்கப்படவேண்டும் என வலியுறுத்தி மஸ்கெலியா நகரில் நேற்று (புதன்கிழமை) முற்பகல் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

பெருந்தோட்ட தொழிலாளர் ஊதிய உரிமைக்கான இயக்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தப் போராட்டத்துக்கு மலையக சிவில் அமைப்புகளும் ஆதரவு வழங்கியிருந்தன.

தனிமைப்படுத்தல் சட்டத்திட்டங்களைப் பின்பற்றி நடைபெற்ற இந்தப் போராட்டத்தில் பங்கேற்றவர்கள் கறுப்புப் பட்டி அணிந்திருந்தமையுடன், தோட்டத் தொழிலாளர்களின் தொழில் உரிமைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும் எனவும் கோஷம் எழுப்பினர்.

அத்துடன், தோட்டத் தொழிலாளர்களை இம்முறையும் ஏமாற்றுவதற்கு முற்பட்டால் போராட்டம் வெடிக்கும் எனவும் எச்சரிக்கை விடுத்தனர்.

இதன்போது கருத்து வெளியிட்ட போராட்டக்காரர்கள், 'மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை நாள் சம்பளமாக ஆயிரம் ரூபா




அவசியம் என்ற கோரிக்கை 2014 ஆம் ஆண்டில் முன்வைக்கப்பட்டது.

தற்போது 6 வருடங்கள் கடந்துள்ளன. இந்தக் காலப்பகுதியில் பொருள்களின் விலை அதிகரித்து, வாழ்க்கைச்சுமையும் அதிகரித்துள்ளது. எனவே எவ்வித நிபந்தனையுமின்றி அடிப்படை நாட் சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்கப்படவேண்டும்.

அதேபோல 25 நாள்கள் வேலை வழங்கப்படுவதையும் தோட்டக் கம்பனிகள் உறுதிசெய்ய வேண்டும். இந்த விடயத்தில் அரசாங்கத்தின் காத்திரமான தலையீடுகள் அவசியம்.' - எனத் தெரிவித்தனர்.

## வவுனியா நகரின் முக்கிய பகுதிகள் முடக்க நிலை!

### இராணுவம் அறிவிப்பு

வவுனியா பட்டாணிச்சூரை சேர்ந்த இருவருக்குக் கடந்த திங்கட்கிழமை கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இந்நிலையில் கடந்த திங்கட்கிழமையில் இருந்து பட்டாணிச்சூர் பகுதி பொலிஸாரால் தற்காலிகமாக முடக்கப்பட்டிருந்தது.

இந்தப் பகுதியில் முதற்கட்டமாக முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் ஒரே குடும்பத்தை சேர்ந்த மேலும் ஐவருக்கு கொரோனா தொற்று நேற்று உறுதி செய்யப்பட்டது.

இதனையடுத்து பட்டாணிச்சூர் பகுதியில் திங்கட்கிழமை இரவு இராணுவத்தினர் குவிக்கப்பட்டு பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டன.

இதேவேளை பட்டாணிச்சூர் பகுதியைச் சேர்ந்த பலர் வவுனியா பசார் வீதி மற்றும் நகரில் உள்ள அநேகமான வியாபார நிலையங்களை நடத்தி வருகின்றமையுடன் ஊழியர்களாகவும் பணியாற்றி வருகின்றனர்.

அதனைக் கருத்தில் கொண்டு நேற்று (புதன்கிழமை) காலை வவுனியா பசார் வீதியின் ஒருபகுதி, தர்மலிங்கம் வீதி, சந்தை வீதிகள் இராணுவம் மற்றும் பொலிஸாரால் முற்றாக முடக்கப்பட்டுள்ளமையுடன், அங்குள்ள வியாபார நிலையங்களில் பணியாற்றுபவர்களுக்கு சுகாதாரப் பிரிவினரால் முதற்கட்டமாக பி.சி.ஆர். பரிசோதனைக்கான மாதிரிகள் பெறப்பட்டு வருகின்றன.

இதேவேளை இந்த வீதிகளுக்குள் தமது தேவை நிமித்தம் பயணித்த பொதுமக்கள் அடையாள அட்டைகள் பரிசீலிக்கப்பட்டு, பட்டாணிச்சூர் பகுதியை சேராதவர்கள் பொலிஸாரால் வெளியில் விடுவிக்கப்பட்டு வருகின்றனர்.




## தினம் ஒரு விவசாயத் தகவல்

### எள்ளின் பயன்கள்

- உடல் எடையை குறைக்க நினைப்பவர்கள் காலை உணவிற்கு 3 மணி நேரத்திற்கு முன் 20 கிராம் கறுப்பு எள்ளை மென்று தின்று தண்ணீர் குடித்தால் நல்ல பலன் கிடைக்கும்.
- கறுப்பு எள்ளில் அதிகளவு இரும்புச்சத்து நிறைந்துள்ளதால் இரத்தச் சோகையை குணப்படுத்தும்.
- வயிற்றுப் போக்கு உள்ளவர்கள் எள்ளை வறுத்து பொடியாக்கி ஒரு ஸ்பூன் அளவு எடுத்து நெய் கலந்து தினமும் மூன்று வேளை என ஆறு நாள்கள் சாப்பிட்டு வந்தால் கொலரா மற்றும் தொற்றுநோயால் உண்டாகும் வயிற்றுப்போக்கு நீங்கும்.
- எள்ளின் இலையையும் வேரையும் அரைத்து தலையில் தடவி அரை மணி நேரம் ஊறவைத்து தலை குளித்து வந்தால் முடி உதிர்தல் குணமாகும்.
- எள் எண்ணெயை ( நல்லெண்ணெய்) 7 நாள்களுக்கு ஒரு முறை தலையில் தேய்த்து சிறிது நேரம் ஊறிய பிறகு வெந்நீரில் குளித்து வர கண் சிவப்பு, கண் வலி குறையும்.

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி

# கொழும்புத் துறைமுகத்தின் ஓர் அங்குலத்தைக் கூட சர்வதேசத்துக்கு வழங்கவேமாட்டாது ராஜபக்ஷ அரசு

## இந்திய வெளிவிவகார அமைச்சர் இலங்கையில் நிற்கும்போது நாடாளுமன்றில் மஹிந்த அதிரடி

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனை யத்தை முழுமையாகவோ அல்லது பகுதி அளவில் கூட சர்வதேச நிறுவனங்களுக்கு வழங்க எமது அரசு எந்தத் தீர்மானமும் எடுக்க வில்லை.

- இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு உரை யாற்றுகையிலே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்த தாவது:-

கொழும்புத் துறைமுகம் எமக்கு மிக முக்கிய கேந்திர நிலையமாகும். எனினும், கடந்த நல்லாட்சி அரசில் கொழும்பு கிழக்கு முனைய அபிவிருத்தி குறித்து 2017ஆம் ஆண்டில் இந்தியாவுடனும், 2019 ஆம் ஆண்டில் இந்தியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுடனும் இரண்டு உடன்படிக்கைகள் செய்துகொள்ளப்பட்டன. அதன் பின்னர் பல நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க நேர்ந்தது.

எவ்வாறு இருப்பினும் கொழும்பு கிழக்கு முனையத்தை முழுமையாகவோ அல்லது பகுதி அளவில் கூட சர்வதேச நிறுவனங்களுக்கு வழங்க எமது அரசு எந்தத் தீர்மானமும் எடுக்கவில்லை.

கடந்த 2005 - 2015 வரையான ஆட் சிக் காலத்தில் கொழும்பு தெற்கு முனையத் தின் அபிவிருத்தியை முன்னெடுத்தோம்.

அரச - தனியார் முறைமையின் கீழ் 35 ஆண்டுகால ஒப்பந்தம் செய்யப்பட்டு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

அதேபோல் கொழும்பு கிழக்கு முனைய அபிவிருத்தியையும், கொழும்பு தெற்கு முனைய அபிவிருத்தியையும் தற்போது எமது ஆட்சியில் முன்னெடுத்து வருகின் றோம் - என்றார்.

# தப்பிச் சென்ற நோயாளி கைது

## மூவர் தலைமறைவு

பொலன்னறுவை - கல்லேல்ல பகுதி யில் உள்ள கொரோனா சிகிச்சை நிலை யத்திலிருந்து தப்பிச் சென்ற மற்றுமொரு கைதி கைது செய்யப்பட்டுள்ளார்.

ஒரு வாரத்தின் பின் இவர் புத்தளம் - ஆராய்ச்சி கட்டு பகுதியில் மறைந்திருந்த நிலையில் நேற்று கைதாகியுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கல்லேல்ல சிகிச்சை நிலையத்திலி ருந்து கடந்த வாரத்தில் 5 கொரோனா நோயாளர்கள் தப்பிச் சென்றிருந்தனர். இவர்கள் அனைவரும் கைதிகளாவர்.

இவ்வாறு தப்பியோடியவர்களில் ஒரு வர் சிலாபத்தில் வைத்து ஏற்கனவே கைதா கியிருந்தார். இந்த நிலையில், இதுவரை இருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், மேலும் 3 பேர் தலைமறைவாகியுள்ளனர்.

# இராணுவமயமாக்கல்கள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன!

## ஊடகவியலாளர்கள் அமைப்பு விசனம்

கொவிட் - 19 நெருக்கடியைக் கையாள் வதற்காக ஒவ்வொரு மாவட்டங்களுக்கும் இராணுவ உத்தியோகத்தர்கள் இணைப்பு அதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ளமை யின் ஊடாக நாடளாவிய ரீதியில் இரா ணுவமயமாக்கல் செயற்பாடு விரிவு படுத்தப்படுகின்றது என இலங்கையில் ஜனநாயகத்திற்கான ஊடகவியலாளர்கள் அமைப்பு விசனம் வெளியிட்டுள்ளது.

கொரோனா வைரஸ் ஒழிப்பு நடவடிக் கைகளை பலப்படுத்தும் நோக்கில், அந்தச் செயற்பாடுகளுக்கான இணைப்பு அதிகாரிகளாக அனைத்து மாவட்டங்க ளுக்கும் தலா ஓர் இராணுவ அதிகாரி பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றுப்பரவ லைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கை மையத்தின் தலைவரும் முப்படைகளின் பதில் தலைமை அதிகாரியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில் வாவின் பரிந்துரைக்கமைய, ஜனாதிபதி செயலகத்தால் இந்த நியமனங்கள் வழங்கப்பட்டன.

நாட்டை முழுமையாக இராணுவ மயப்படுத்தும் வகையில் இந்தச் செயற் பாடு அமைந்துள்ளதாகப் பலரும் விசனம் வெளியிட்டுவரும் நிலையில், வடமேல் மாகாணத்தின் புத்தளம் மாவட்டத்துக்குப் பொறுப்பான இராணுவ அதிகாரியாக மேஜர் ஜெனரல் ஏ.பி.ஐ.பொன்னாண்டோ நியமிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் சர்வ தேச உண்மைக்கும் நீதிக்குமான செயற் திட்டம் குறிப்பாக சுட்டிக்காட்டியுள்ளது.

மேஜர் ஜெனரல் ஏ.பி.ஐ.பொன்னாண்டோ பிரித்தானியாவில் அமைந்துள்ள இலங் கை உயர்ஸ்தானிகரகத்தில் பணியாற்றிய போது, உயர்ஸ்தானிகரகத்தின் முன்பாக மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டமொன்றில் கலந்துகொண்டவர்களை அச்சுறுத்தும் வகையிலான சைகையொன்றை வெளிப் படுத்தினார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டு, பிரித்தானிய நீதிமன்றத்தில் அவருக் கெதிராக வழக்குத்தொடரப்பட்டது.

இத்தகைய பின்னணியில் அவர் புத்தளம் மாவட்டத்துக்கு இணைப்பு அதி காரியாக நியமிக்கப்பட்டுள்ளமை தொடர் பில் சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற்திட்டம் அதன் டுவிட்டர் பக்கத்தில் பதிவொன்றைச் செய்திருக்கிறது.

'இணைப்பு அதிகாரிகளில் ஒருவரான பிரியங்க பெர்னாண்டோ, தமிழ் ஆர்ப்பாட்டக்காரர்களை அச்சுறுத்தும் விதமான சைகையை வெளிப்படுத்திய மையால் பொது ஒழுங்கு குற்றத்துக்கான பிரித்தானிய மாஜிஸ்திரேட் நீதிமன்றத் தில் ஆஜராகி வருகிறார்' என்று அந்தப் பதிவில் சுட்டிக்காட்டியிருக்கிறது.

அதேவேளை 'கொவிட் - 19 நெருக்கடி யைக் கையாள்வதற்கான இந்த நியம னங்களின் ஊடாக நாடளாவிய ரீதியில் இராணுவ மயமாக்கல் செயற்பாடு விரிவுபடுத்தப்படுகின்றது. - என்று இலங்கையில் ஜனநாயகத்துக்கான ஊடகவியலாளர்கள் அமைப்பு விசனம் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கல்லுண்டாயில் திடீர் சூறாவளி

## 7 வீடுகள் சேதம்





(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஜன.06

கல்லுண்டாய் பகுதியில் நேற்றைய தினம் வீசிய திடீர் சுழல் காற்றினால் 7 வீடுகள் சேதமடைந்தன. அப்பகுதி மக்கள் பெரும் அசௌகரியத்திற்கு உள்ளாகினர்.

சண்டிலிப்பாய் பிரதேச செய லாளர் பிரிவிற்கு உட்பட்ட கல்லுண்டாய் பகுதி யில் இன்று பிற் பகல் ஒரு மணியளவில் வீசிய திடீர் காற்றின்போது இந்த அனர்த் தம் ஏற்பட்டது.

இப் பகுதியில் மாரி மழை பொழிந்த நேரம் திடீரென வீசிய காற்றின் காரண மாக வீட்டின் ஓடுகள், கூரைத் தகடுகள் தூக்கி வீசப்பட்டன. வீட்டில் இருந்தோர் பாதுகாப்பு தேடித் தப்பித்தனர். இருந்தபோ தும் மழைநீர் வீட்டிற்குள் புகுந்தமையால் வீட்டிற்குள் இருந்த உடைமைகள் பலவும் நீரில் நனைந்து சேதமடைந்தன.

இந்த அனர்த்தம் காரணமாக பாதித்த பகுதிகளை சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் மற்றும் அனர்த்த முகாமைத் துவப் பிரிவினர் அப் பகுதிக்கு விரைந்து நேரில் பார்வையிட்டனர்.

# சிறுபான்மை இன மக்களின் மனங்களைக் காயப்படுத்தாதீர்

## அரசிடம் மைத்திரி வலியுறுத்து

சிறுபான்மை இன மக்களின் மனங்களையும், உணர்வுகளையும் காயப் படுத்திவிட்டு நாட்டைக் கட்டியெ ழுப்ப முடியாது. இதை அரசு கவனத்தில் கொண்டு செயற்பட வேண் டும்.

- இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழக்கின்ற நபர்களின் சடலங்களை நல்லடக்கம் செய்வதற்கு அரசு அனுமதி யளிக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பு ஊடகமொன்றுக்கு வழங் கிய நேர்காணலிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

கொரோனாவால் உயிரிழந்தவர்க ளின் சடலங்களைப் புதைப்பதால் எந்தப் பிரச்சினையும் இல்லை என்பதை உலக சுகாதார நிறுவனம் கூட கூறியிருக்கின் றது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில், சடலங்களைப் புதைப் பதற்கு அரசு தடை விதிக்கின்றமை பாதிக் கப்பட்ட முஸ்லிம் மக்களிடத்தில் பல்வேறு பட்ட சந்தேகங்களை எழுப்புகின்றன எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, இந்த விடயத்தில் ஜனாதிபதி உடனடியாக அக்கறை செலுத்த வேண் டும் எனவும், சடலங்களை நல்லடக்கம் செய்வதற்கு அனுமதி வழங்க வேண்டும் எனவும் அவர் மேலும் வலியுறுத்தியுள் ளார்.

# கொழும்புத் துறைமுகத்தை சர்வதேசத்துக்கு கொடுக்கவே முயற்சிக்கிறது ராஜபக்ஷ அரசு

## சபையில் ஜே.வி.பி. குற்றச்சாட்டு



புதிய உடன்படிக்கை ஒன்றை நடைமுறைப் படுத்தி அதன் மூலம் கொழும்புத்துறை முகத் தை சர்வதேச நிறுவனங் களுக்குக் கொடுக்கவே ராஜபக்ஷ அரசு முயற்சித்து வருகின்றது.

- இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க குற்றம் சுமத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தின் பங்கு களில் 49 வீதம் துறைமுக அதிகார சபைக்கும், 51 வீதம் இந்திய நிறுவனத்துக்கும் கொடுக்கும் முயற்சிகளை அரசு முன்னெடுத்து வருகின்றது.

முன்னைய அரசு, கொழும்புத் துறை முகத்தின் கிழக்கு முனைய அபிவிருத்தி என்ற பெயரில் செய்து கொண்ட உடன் படிக்கைக்கு அமைய துறைமுக அதிகார சபை இந்திய, ஜப்பான் நிறுவனங்களு டன் ஒன்றிணைந்து கட்டியெழுப்பும் நிறுவனத்துக்குக் குறைந்த வட்டியில் ஜப்பானிடம் இருந்து கடன் கிடைக்கும் எனவும் கூறப்பட்டது.

ஆனால், தற்போது செய்துகொள்ளும் புதிய உடன்படிக்கையில் ஜப்பான் இல்லை.

இந்தநிலையில், பழைய உடன்படிக் கையை மாற்றியமைக்க முடியவில்லை எனப் பொய்களைக் கூறிக்கொண்டு புதிய உடன்படிக்கையை நடைமுறைப் படுத்தி அதன் மூலம் கொழும்புத் துறை முகத்தை சர்வதேச நிறுவனங்களுக்குக் கொடுக் கவே அரசு முயற்சித்து வருகின்றது. - என்றார்.

# 'கொரோனா'ப் பிடியிலிருந்து மேலும் 761 பேர் மீண்டார்கள்

கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்கான நிலையில் சிகிச்சை பெற்று வருபவர்களில் மேலும் 761 பேர் நேற்று குணம டைந்து நேற்று வீடு திரும்பினர்.

இதன்படி இலங்கையில் கொரோனாவின் பிடிக்குள் இருந்து மீண்டவர்களின் எண்ணிக்கை 39 ஆயிரத்து 23 ஆக அதி கரித்துள்ளது.

அத்துடன் 6 ஆயிரத்து 486 பேருக்குத் தொடர்ந்தும் சிகிச்சையளிக்கப்பட்டு வரு கின்றது. கொரோனாவால் 217 பேர் உயிரிழந்துள்ளனர்.

# பிரதமர் மஹிந்தவைச் சந்தித்து சுமந்திரன்,சாணக்கியன் பேச்சு

## மட்டு.போதனா வைத்தியசாலைக்கு குறித்து



மட்டக்களப்புபோதனா வைத்தியசாலைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரின் முயற்சியால் இதய வடிகுழாய் மற்றும்அஞ்சியோகிராம் இயந்திரங்கள் என்பன கிடைப் பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த இயந்திரங்கள் இரு கிழமைகளில் வர இருந்த நிலையில், அவற்றை இடைநிறுத்திகளுத் துறை மாவட்டத்துக்கு மாற்றியமைப்பதற்கான நடவடிக்கைகள் திரைமறைவில் மேற்கொள் ளப்பட்டிருந்தன.

இந்த விடயம் தொடர்பாக பிரதமர் மற்றும் சுகாதார அமைச்சருக்கு முகவரியிடப்பட்டு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனால் வழங்கப்பட்ட கடிதத்தைப் பெற்றுக்கொண்டு சாணக்கியன் எம்.பி., சக நாடாளுமன்ற உறுப்பினர் சுமந் திரனையும் அழைத்துக்கொண்டு நேற்று (புதன் கிழமை) பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் சுகாதார அமைச்சர் ஆகியோரைச் சந்தித்து, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் தேவைப்பாடுகள் தொடர்பில் எடுத்துரைத்தனர்.

இதனை ஏற்றுக்கொண்ட பிரதமர், இருதயவியல் பிரிவிற்கான உபகரணங்களை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு சமர்ப்பிக்க வேண்டிய செயற்பாடுகளை உடன் நடைமுறைப்படுத்த வேண்டுமென சுகாதார அமைச்சருக்கு உத்தரவிட்டார்.

கிழக்கு மாகாணத்தில் எந்தவொரு வைத்தியசாலையிலும் இந்த உபகரணங்கள் இல்லாமையால் பல வருடங்களாக மக்கள் உரிய நேரத்துக்குச் சிகிச்சையின்றி பல சிரமங்களுக்கும் மத்தியில் வெளி மாகாணங்களுக்குச் சென்று சிகிச்சை பெற்றுவருகின்றனர். இதனால் காப்பாற்றப்பட்டிருக்க வேண்டிய பல உயிர்களை இழந்துள்ளோம். இந்தப் பிரச்சினை இனி முடிவுக்கு கொண்டுவரப்படுமென்பது குறிப்பிடத்தக்கது. இதனைக் கூட்டமைப்புக் குழுவினர் பிரதமருக்குச் சுட்டிக்காட்டினர்.

# 4 இந்தியர்கள் மஞ்சளுடன் கைது



இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக கடல் மார்க்கமாக இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட 1680 கிலோ கிராம் மஞ்சள் கட் டிகளை கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

புத்தளம் குதிரைமலை கடற்பரப்பில் வைத்து சந்தேகத்திற்கு இடமான டொவ் படகு ஒன்றை இலங்கை கடற்படையினர் சோதனை செய்துள்ளனர்.

குறித்த படகில் மறைத்து வைக்கப்பட் டிருந்த மஞ்சள் கட்டிகள் இதன்போது பிடிபட்டுள்ளன.

படகில் பயணித்த 4 இந்தியப் பிரஜைகளை கைது செய்த கடற்படையினர், படகையும் பறிமுதல் செய்துள்ளனர்.

## மாகாணசபைத் தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அமைச்சர் ஜெயசங்கருடனான சந்திப்பின் போது நேற்றுக் கலந்துரையாடப்பட்டதாக தெரிவித்துள்ள கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என்பது தொடர்பாகவும் இந்தியாவின் அக்கறை வெளிப்படுத்தப்பட்டிருந்தது எனவும் தெரிவித்தார்

இலங்கைக்கான இரண்டு நாள் உத்தியோக பூர்வ விஜயத்தினை மேற்கொண்டுள்ள இந்திய வெளிவிகார அமைச்சருக்கும் இலங்கை கடற்றொழில் அமைச்சருக்கும் இடையில் நேற்று நடைபெற்ற விசேட சந்திப்பிலேயே இந்த விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் – இந்திய இலங்கை கடற்றொழிலாளர்களின் பிரச்சினைகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்ட குறித்த கலந்துரையாடலின்போது, வடக்கிற்கும் தெற்கிற்கும் இடையில் தேசிய நல்லிணக்கத்தின் ஊடான உறவுப் பாலத்தினை வலுப்படுத்துவதையும், இந்தியாவுடன் விசேடமாக தமிழ் நாட்டுடன் நல்லுறவை ஏற்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டே ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் கடற்றொழில் அமைச்சைத் தனக்கு வழங்கி இருப்பதாக இந்திய வெளியுறவு அமைச்சருக்கு எடுத்துரைத்தார் எனத் தெரிவித்தார்.

மேலும் கடந்த காலங்களில் இலங்கையில் கைது செய்யப்பட்டுள்ள இந்திய கடற்றொழிலாளர்களையும் இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ள இலங்கை கடற்றொழிலாளர்களையும் விடுதலை செய்து சொந்த நாடுகளுக்கு அனுப்பி

## நிபுணர் குழுவினரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

மேலும் தொற்று நோய்கள் தொடர்பில் ஆராயும் நிபுணர் குழு ஆய்வுகளை மேற்கொண்டு எனவும், அந்தக் குழுவின் பரிந்துரைகள் கிடைக்கப் பெற்றவுடன் குறித்த தடுப்பூசிகள் கொண்டுவரப்படும் எனவும் சுகாதார அமைச்சர் கூறினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:–

இலங்கைக்குள் கொரோனா வைரஸ் தடுப்பூசிகளைப் பெற்றுகொடுக்க ஏற்றுக் கொள்ளப்பட்ட வழிமுறைகள் கையாளப்படுகின்றது.

அதற்கமைய சுகாதாரப் பணிப்பாளர் தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள தொற்றுநோய் தடுப்புப் பிரிவினரை உள்ளடக்கிய நிபுணர் குழு இந்த விடயங்களை ஆராய்ந்து வருகின்றது.

எனினும், உலகில் இதுவரையில் தயாரிக்கப்பட்ட தடுப்பூசிகள் குறித்தும் அவற்றில் இலங்கைக்கு ஏற்ற தடுப்பூசி எதுவென்றும் நிபுணர் குழு ஆராய்ந்து வருகின்றது.

அதேபோல் தடுப்பூசியைக் கொண்டு வந்தால் அதனைக் களஞ்சியப்படுத்தும் முறைமை மற்றும் அதற்கான செலவுகள் குறித்தும் உப குழுக்கள் நியமிக்கப்பட்டு ஆராயப்பட்டு வருகின்றன.

கொவெக்ஸ் உடன்படிக்கையில் கையொப்பமிட்டுள்ள நாடுகளில் இலங்கையும் உள்ளதால் இலங்கையின் சனத்தொகையில் 20 வீதமானோருக்குத் தடுப்பூசிகளை வழங்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறு இருப்பினும் தொற்றுநோய் குறித்து ஆராயும் நிபுணர் குழுவின் மூலமாக முறையான தடுப்பூசி குறித்த பரிந்துரைகள் கிடைக்கப்பெற்றவுடன் கொரோனாவுக்கு எதிரான இந்தத் தடுப்பூசிகளை இலங்கைக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும் – என்றார்.

# வவுனியா வடக்குக் கல்வி வலய நிதி மோசடி இருவரில் ஒருவர் ரூ.10 லட்சம் செலுத்தினார்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஜன.07

வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் இடம்பெற்ற நிதி மோசடியில் தொடர்புபட்ட இருவரில் ஒருவர் தனது நிதியில் ஒரு பகுதியை நேற்று முன்தினம் மீளச் செலுத்தியுள்ளார்.

வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் இடம்பெற்ற நிதி மோசடி அண்மையில் கண்டு பிடிக்கப்பட்டது. இதன்போது சம்பளப் பட்டியில் தயாரித்தவர் 2 கோடியே 60 லட்சம் வரையில் மோசடி செய்தார் என்று அதனைக் கணக்கியல் ரீதியில் கண்டறிய நியமிக்கப்பட்ட குழு ஓர் அறிக்கை சமர்ப்பித்திருந்தது.

இந்த அறிக்கையில் 2 கோடியே 60 லட்சம் மோசடி செய்தவருக்கு முன்பு இருந்த உத்தியோகத்தரும் 14 லட்சம் ரூபா வரை இப்படி மோசடி செய்துள்ளார் என அறிக்கை சமர்ப்பித்தனர். இதனையடுத்து ஆரம்ப கட்ட ஒழுக்காற்று விசாரணைக்கு ஐவர் அடங்கிய குழு நியமிக்கப்பட்டதோடு மோசடியில் ஈடுபட்ட இருவரையும் குறித்த பணத்தை மீளச் செலுத்துமாறும் அறிவுறுத்தல் விடப்பட்டது.

இந்த அறிவுறுத்தலின் பிரகாரம் ஆரம்ப காலத்தில் 14 லட்சம் ரூபாவினை மோசடி செய்தவர் அதற்காக நேற்று முன்தினம் 10 லட்சம் ரூபா பணம் மீள வைப்பிட்டுள்ளார்.

இருந்தபோதும் பெருந்தொகை மோசடியில் ஈடுபட்டவர் இதுவரை பணத்தைச் செலுத்தவில்லை.

## தமிழர் விவகாரத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

சமத்துவம், நியாயங்கள், சமாதானம் மற்றும் கௌரவமாக வாழும் உரிமை என்பன ஐக்கிய இலங்கைக்குள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட வேண்டும் என்று இலங்கை வந்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்திருந்தார். அத்துடன் அதிகார பகிர்வு விடயத்தில் அரசியல் அமைப்பில் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது குறித்தும் இலங்கை அரசு நல்லதொரு முன்னேற்றகரமான செயற்பாட்டை கையாளும் எனத் தாம் நம்புவதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்தநிலையில், அவர் முன்வைத்துள்ள இந்தக் கருத்துக்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்வதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.எ.சுமந்திரன் சபையில் நேற்று உரையாற்றும்போது கூறினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நீதி அமைச்சின் கீழ் உள்ள தண்டனைச் சட்டக்கோவை, பிணை மற்றும் சான்று (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் சற்று நேரத்துக்கு முன்னர் முன்வைத்துள்ள கருத்தொன்றை சபையில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். இலங்கையின் மறுசீரமைப்பு செயற்பாடுகளில் தமது ஒத்துழைப்புகள் நீண்டகாலமாகக் காணப்பட்டு வருகின்றன எனவும், அதேபோல் இலங்கையின் அரசியல் தளத்தில் இன ரீதியிலான ஒத்துழைப்பைத் தாம் எதிர்பார்க்கின்றோம் எனவும் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு, சமத்துவம், நியாயங்கள், சமாதானம் மற்றும் கௌரவமாக வாழும் உரிமை ஐக்கிய இலங்கைக்குள் வெற்றிகரமாக இடம்பெறும் எனத் தாம் எதிர்பார்க்கின்றோம் எனவும், இதில் அதிகாரப் பகிர்வு விடயத்திலும் அரசமைப்பில் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது குறித்தும் இலங்கை அரசு நல்லதொரு முன்னேற்றகரமான செயற்பாட்டைக் கையாளும் எனத் தாம் நம்புவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்திய வெளிவிவகார அமைச்சரின் இந்தக் கருத்துக்கள் தொடர்பில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றது.

அதேபோல் ஜனாதிபதியும் இந்திய வெளிவிவகார அமைச்சருக்கு உறுதிப்பாடு ஒன்றைக் கொடுத்துள்ளார். அதாவது தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் எனச் சகலரதும் நலன்களுக்காகத் தான் அர்ப்பணிப்புடன் செயற்பட எதிர்பார்க்கின்றேன் என ஜனாதிபதியும் வாக்குறுதியளித்துள்ளார். அரசின் உண்மையான எதிர்பார்ப்பு இது வென்றால் அதற்காக எமது முழுமையான ஒத்துழைப்பை அரசுக்கு வழங்க நாம் தயாராக உள்ளோம் – என்றார்.




# சாணக்கியனுக்கு மற்றுமோர் பதவி!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனுக்கு மற்றுமொரு முக்கிய பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய அவர் நாடாளுமன்றத்தில் மற்றுமோர் ஆலோசனைக்குழுவிற்கு நியமிக்கப்பட்டுள்ளார்.



சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேயவர்தன வால் இந்த புதிய நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இந்தக் குழு நாட்டின் அபிவிருத்தியிலும் வளர்ச்சியிலும் பங்குகொள்ளும் முகவர் நிறுவனங்களினது நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் ஆலோசனைக் குழுவாகும்.

இவற்றில் யு.என்.டி.பி., யு.எஸ்.எயிட், தேசிய ஜனநாயக நிறுவனம் (என்.டி.ஐ), சர்வதேச குடியரசு நிறுவனம் (ஐ.ஆர்.ஐ), டபிள்யூ.எவ்.டி அடங்குகின்றன.

மேலும் இதன் முதல் கூட்டம் எதிர்வரும் 8 ஆம் திகதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சுகாதார வழிகாட்டுதல்களுடன் பாடசாலைகள் மீண்டும் ஆரம்பம்!

## கல்வி அமைச்சு திட்டவட்டம்

எதிர்வரும் திங்கட்கிழமை பாடசாலைகள் மீண்டும் திறக்கப்படவுள்ள நிலையில் இது தொடர்பான அனைத்து சுகாதார வழிகாட்டுதல்களும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன எனக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

சுகாதார விதிமுறைகளைக் கடுமையாகப் பின்பற்றி பாடசாலைகளை மீண்டும் திறக்கும் செயன்முறை தொடர்பாக அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் மாணவர்களுக்குத் தெரிவிக்கப்படும் என கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

அத்தோடு பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், சுகாதார மருத்துவ அதிகாரிகள் மற்றும் பிறரின் பங்களிப்புடன் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் தலைமையில் பெற்றோருடன் கலந்துரையாடலை நடத்துமாறு கல்வி அமைச்சு பாடசாலைகளுக்கு அறிவித்துள்ளது.

இந்நிலையில் இதுதொடர்பான கலந்துரையாடல்கள் நேற்று (புதன்கிழமை) முதல் 10 ஆம் திகதி வரை நடைபெறும் என கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.

ஜனவரி 11 ஆம் திகதி, 2 ஆம் வகுப்பு முதல் 13 ஆம் வகுப்பு வரையிலான அனைத்து மாணவர்களுக்கும் முதலாம் தவணை கல்வி நடவடிக்கைகள் ஆரம்பமாக வுள்ளன.

இதேவேளை தரம் ஒன்று மாணவர்களுக்கு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 2 ஆம் வாரத்தில் கல்வி நடவடிக்கைகள் இடம்பெறும் என பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.

அத்துடன், தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகள் தவிர்ந்த மேல் மாகாணத்தின் ஏனைய பிரதேசங்களில் அமைந்துள்ள பாடசாலைகளில் தரம் 11 இற்கான கல்வி நடவடிக்கை எதிர்வரும் 25 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Anna EXPRESS Courier Services
அண்ணா விரைவுப் பொதிகள் சேவை
3-6 நாட்கள்
077 8889388
075 3305500
070 3305500
லண்டன் ⇨ 1000/=
15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும். (யாழ் மாவட்டம் முழுவதும்)
எம்முடன் இணைந்து உங்களிடத்தில் பொதிகள் சேவை தொடங்குவதாயின் தொடர்புகொள்ளவும்
யாழ்ப்பாணம் சங்கானை கல்வியங்காடு ஆவரங்கால் நெல்லியடி
சங்கத்தானை பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு
கனகராயன்குளம் மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு

# நல்லூரான் செம்மணி வளைவு பொங்கல் தினத்தன்று திறப்பு!



யாழ்ப்பாணம் செம்மணி வீதியில் பிரமாண்டமாக நிர்மாணிக்கப்பட்ட நல்லூரான் செம்மணி வளைவு எதிர்வரும் 14 ஆம் திகதி பொங்கல் தினத்தன்று நண்பகல் 12 மணியளவில் திறந்து வைக்கப்படவுள்ளது.

நல்லூர் கந்தப் பெருமானின் அடியவர்களின் வேண்டுகளுக்கு அமைய நல்லூர் முருகன் தண்ணீர் பந்தல் சபையினரின் முயற்சியால் இந்த வளைவு அமைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மக்களின் கலை, கலாசார பண்பாட்டு விழுமியங்களின் புனித வாழ்க்கை நெறியான கந்த புராண கலாசாரத்தின் அடையாளங்கள் பல இந்த வளைவில் வனப்புற பிரதிபலிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

இந்த வளைவு அமைக்க முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், நிதியொதுக்கீடுகளைப் பெற்றுக்கொடுத்ததோடு, தனது சொந்த நிதி உதவிகளையும் வழங்கியிருந்தார்.

2019 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் இந்த வளைவுக்கான அடிக்கல் முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் நாட்டி வைத்து, வளைவின் கட்டுமாணப்பணிகளை ஆரம்பித்துவைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# உயரிய கௌரவ விருதுபெறும் இலங்கையர் தொடர்பான பெயர்ப் பட்டியல் வெளியானது!



பிரித்தானியாவின் உயரிய கௌரவ விருது பெற்றுக்கொள்ளவுள்ளவர்கள் தொடர்பான முக்கிய அறிவித்தல் வெளியாகியுள்ளது.

பிரித்தானியாவிலுள்ள மக்களின் சிறந்த சாதனைகளை அங்கீகரிக்கும் வகையில் பிரித்தானிய மகா ராணியின் புத்தாண்டு கௌரவபட்டியல் வெளியிடப்பட்டு வருகின்றது.

பேராசிரியர் ரவி சில்வா, பேராசிரியர் மொஹான் எதிரிசிங்க, பேராசிரியர் ரமணி மொனசிங்க, கஜன் வாலோபுள்ளே, வைத்தியர் சாய்கன்னி கனகசுந்தரம் மற்றும் மொஹமட் ஹசாத் கெலன் ஒஸ்மன் ஆகியோருக்கு பிரிட்டிஷ் பேரரசின் ஆணைக்குழு விருது வழங்கப்படுகிறது.

பேராசிரியர் ரவி சில்வா, கடந்த மூன்று தசாப்தங்களாக அறிவியல், கல்வி மற்றும் ஆராய்ச்சிக்கான அவரது சிறந்த சேவைகளுக்காக இந்த விருது பெறவுள்ளார்.

பேராசிரியர் எதிரிசிங்ஹ சுகாதாரத் துறையில் மேம்பட்ட பொருள்களை உற்பத்தி செய்வதற்கான புதிய முறைகளை உருவாக்குவதில் முன்னணியில் உள்ளார்.

மயக்க மருந்து, தயாரிப்பு மற்றும் தீவிர சிகிச்சை ஆகியவற்றில் ஆற்றிய சேவைகளுக்காக பேராசிரியர் ரமணி மொனசிங்கவுக்கு விருது வழங்கப்படுகிறது. கஜன் வாலோபுள்ளே சமத்துவம் மற்றும் சமூக ஒற்றுமைக்காக அவர் ஆற்றிய சேவைகளுக்காக விருது பெறுகிறார்.

நுண்ணுயிரியல், தொற்று தடுப்பு மற்றும் கட்டுப்பாடு, குறிப்பாக நடவடிக்கைகளின் போது ஆற்றிய சேவைகளுக்காக வைத்தியர் சாய்கன்னி கனகசுந்தரத்துக்கு விருது வழங்கப்படுகிறது.

இங்கிலாந்தில் உள்ள இலங்கை சமூகத்திற்கு ஆற்றிய சேவைகளுக்காக மொஹமட் ஹசாத் கெலன் ஒஸ்மனுக்கு விருது வழங்கப்படுகிறது.

கல்யாணமாலை
வட சர்வதேச திருமண சேவை
மணமகன் விவரம்
பிறந்த திகதி - 1985.12.04
மதம் - இந்து V
நட்சத்திரம் - உத்திரட்டாதி
செவ் - 8இல்
பாவம் - -----
கல்வி - Engineering
தொழில் - Engineer UK
எதிர்பார்ப்பு - படித்த அழகான பெண்
மணமகள் விவரம்
பிறந்த திகதி - 1992.12.19
மதம் - இந்து V
நட்சத்திரம் - சித்திரை 02
பாவம் - 13 1/2
செவ் - -------
கல்வி - UK பட்டப்படிப்பு
தொழில் - UK PR
எதிர்பார்ப்பு - படித்த ஆங்கில அறிவுள்ள மணமகன் தேவை.
Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப் படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும்.
பதிவுக் கட்டணம் 1000 + 300.
க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை.
குஞ்சர் கடையடி,
பருத்தித்துறை பிரதான வீதி,
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை
077 3434 415
077 8578 528

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.01.2021 இல் வெளியிடப்பெற்றது.